# இராஜ ராஜ சோழன்

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை-1

இலந்தையடிக் கவுணிய
இரா. சிவ. சாம்பசிவ சர்மா

FIRST IMPRESSION—1929
SECOND IMPRESSION—1930

Approved by the text-book Committee

# இராஜ ராஜ சோழன்

சென்னை
அர்ச் : காபிரியேல் உயர்தரக் கலாசாலைத்
தலைமைத் தமிழ்ப் பண்டிதர்
இலந்தையடிக் கவுணிய
இரா. சிவ. சாம்பசிவ சர்மா
எழுதியது

பயொனீர் பப்ளிஷர்ஸ்
சென்னை
1930

பதிப்புரிமை பெற்றது]

[விலை அணா 7

PRINTED AT
THE GUARDIAN PRESS, Ltd.,
MADRAS.

# முன்னுரை

தமிழ் மன்னர்களின் பழஞ் சரிதைகளை இளஞ் சிறார்கள் உணரவேண்டியது இன்றியமையாத தாகும். ஆதலின் தமிழ் மன்னர்களில் சோழர்களின் சரிதைகளை மாணவர்கள் உணருமாறு இயற்றித்தர முன்வந்தேன். இந்நூலிற் பெருமை தங்கிய இராஜ ராஜ சோழன் சரித்திரத்தைத் தெளிவாக மாணவர்களுக்குப் பயன்படும் வகையிற் கூறியுள்ளேன். இதுபோன்ற சோழர்களின் சரிதைகளைத் தெளிவுற விளக்கிக் கூறும் நூல்கள் பல என்னால் எழுதப்பட்டு விரைவில் வெளி வரும். இச்சிறு நூலைக் கண்ணுறும் பெரியார்கள் தங்கள் பள்ளிகளிற் பாடப் புத்தகமாக வைத்து என்னை ஆதரிப்பார்க ளென்று நம்புகின்றேன். என்னிடத்து வைத்துள்ள அன்பால் தமக்குறுந் துன்பையும் நினைந்திடாது இந்நூலுக்கு என் வேண்டுகோளுக் கிணங்கி ஒரு முகவுரை எழுதி உதவிய பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர், திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்களுக்கு என் மனமார்ந்த வந்தனத்தை வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். என்னால் எழுதப்படும் புத்தகங்களைப் பாடப் புத்தகங்களாக்கி என்னை இத்துறையில் ஊக்கிய பெரியார்களுக்கு என் வந்தனம் உரிய தாகுக.

பொதுமறை யகம்,<br>திருவல்லிக்கேணி.

இங்ஙனம்<br>அன்பன்,<br>இரா. சிவ. சா. சர்மன்.

சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழாசிரியர்

## திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியார்

அவர்கள் எழுதியது

சென்னை இரா. சிவ. சாம்பசிவசர்மா அவர்கள் எழுதிய 'இராஜ ராஜ சோழன்' என்னும் சிறு நூலைப் பார்வையிட்டேன். அது தென்னாட்டு வரலாற்றைப் பொதுவாகத் தழுவியும், அந்நாட்டு முடியுடை வேந்தர் மூவருள் ஒருவராகிய சோழர் வரலாற்றைச் சிறப்பாகப் பின்பற்றியும் வகுக்கப்பட்டுள்ளது. இத்தகைய நூல்கள் மாணவர்கள் இன்றியமையாது கற்றற் குரியனவாகும். சிறுவர் இவற்றைக் கற்பதால் பழைய மன்னர்கள் ஆண்மை, கொடை, தமிழ்ப்பற்று, செங்கோன்மை, அறம் முதலிய துறைகளில் எவ்வாறு சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தனர் என்பதை அறிந்து மிகப் பெரு மகிழ்ச்சியை அடைவார் என்பதற்கு ஐயமில்லை. கதை மனத்தைக் கவர்ந்து செல்வதால் பொதுவாகச் சரித்திரக் கதைகளைப் படிப்பவர்க்கு நிகழும் உணர்வு சலித்தல் என்னும் குற்றம் இதன்கண் காணப்படவில்லை. நடை ஒழுகிசையோடு செவிக் கினியதாய்ச் செல்லுதல் நோக் கத்தக்கது. இந்நூலாசிரியர் கதை சொல்லும் முறையும் பாராட்டத்தக்கதே. இதற்கு முன் வெளிப்போந்த சரித்திர நூல்கள் பலவற்றையும் ஆராய்ந்து இவர் இந்நூலை எழுதியுள்ளதால் இந்நூல் சரித்திர ஆராய்ச்சி முறைக்கும் பெரிதும் பயன் படுவதாகும். இவர் இது போன்ற அரிய நூற்கள் பலவற்றை எழுதித் தமிழகத் திற்குப் பயன் விளைப்பாராக.

சென்னை,<br>23-6-29.

மணி. திருநாவுக்கரசன்.

# பொருளடக்கம்

முன்னுரை
1. பராந்தகன் ... ... ... 11
2. பாண்டியன் பொறாமை கொள்ளல் ... 16
3. தீமை செய்தார் தீமை பெறுவர் ... 24
4. இளவரசன் ... ... ... 30
5. இராஜ ராஜன் நிலை ... ... 34
6. படை யெழுச்சி ... ... ... 38
7. புத்துயிர் அளிக்கும் பொன்னுருவம் ... 48
8. தந்தையும் மகளும் ... ... 49
9. குந்தவை திருமணம் ... ... 56
10. விமலாதித்தன் நாடடைதல் ... ... 75
11. சோழன் திருமுறை வகுத்தல் ... 78
12. இறைபணி ... ... ... 87
13. தேவியின் திருப்பணி ... ... 94
14. முத்திப்பேறு ... ... ... 97

# இராஜ ராஜ சோழன்

## I. சோழ நாடு

### பராந்தகன்

தென்னிந்தியாவில் மூன்று பெரிய நாடுகள் இருந்தன. அவைகள் முறையே சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்பனவாகும். அவை களைத் தமிழ் நாடுகள் என்றுங் கூறுவதுண்டு. அம் மூன்று நாடுகளையும் முன்காலத்தில் சிறந்த மன்னர்கள் ஆண்டுவந்தனர். அவர்களுக்கு மும்முடி மன்னர்கள் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. அவர்கள் சிறப்பைத் தமிழ் மொழியிலுள்ள பெரு நூற்களில் தெளிவாக எழுதிவைத்துள்ளார்கள். அவர்கள் மூவரும் தமிழ்

மொழியை வளர்த்த பெருந்தகையாளர்கள். அவர்கள் தமிழ்ப் புலவர்களைக் கண்ணும் மணியும்போல் சிறப் பாகப் போற்றிவந்தனர். தமிழ் நாட்டு மன்னர்கள் சிறந்த நாகரிகம் உடையவர்களாயும் கல்வி கேள்வி களில் மிக்கார்களாயும் வாழ்ந்து வந்தனர். அதனால் அவர்கள் புகழ் எங்கும் பரவி யிருந்தது. மேனாட்டா ரும் அவர்களோடு வர்த்தகம் செய்து வந்தனர்.

சேர சோழ பாண்டிய நாடுகளில் மிக்க மேன்மை பெற்றது சோழ நாடே. இதற்குப் புனல் நாடு, பொன்னி நாடு, செம்பியன் நாடு முதலிய பல பெயர்கள் உண்டு. மிக்க வளப்பம் பொருந்திய நாடுகளில் முதன்மை பெற்றது சோழ வள நாடே.

சோழ நாட்டில் ஒரு பெரிய ஆறு ஓடுகின்றது. அதற்குக் காவேரி நதி என்று பெயர். அதில் கோடைக்காலத்திலும் நீர் வற்றாது. அது குடகு மலை யில் உற்பத்தியாகி மேற்குத் தொடர்ச்சி மலைகளின் வளப்பத்தைக் கவர்ந்துகொண்டு மேற்கிருந்து கிழக்கு நோக்கி ஓடிவருகிறது. அந்த நதி, தான் கொண்டு வரும் மலை வளத்தைச் சோழநாட்டில் தங்கச் செய்து, அந் நாட்டை வளப்படுத்துகிறது. சோழ நாடு சம நிலப் பிரதேசம். ஆதலால் காவேரி நதி பல கால்களாய்ப் பிரிக்கப்பட்டு ஆங்காங்குக் கொண்டு செல்லப்படுகிறது. அக்கால்வாய்களால் சோழ நாட்டில் உழவுத் தொழில் சிறப்பாக நடைபெறுகிறது. உண்ண உணவுப் பொரு ளும் வாழ வசதியும் கிடைக்கும் இடங்களில் ஜனங்கள்

நிறைந்து வாழ்வார்கள் அல்லவா? சோழ நாட்டில் மக்கள் நெருங்கிக் குடியேறி வசிப்பாராயினர். அவர்கள் உழவுத் தொழிலைச் சிறப்பாகச் செய்துகொண்டு வந்தமையால் செல்வம் நிறைந்தவர்களாகவும் இருந்தனர். அவர்களை ஆண்டுவந்த அரசர்களுக்குச் சோழர்கள் என்று பெயர். அவர்கள் மிக்க கீர்த்தி வாய்ந்தவர்கள்.

சோழர்களில் மிக்க சிறப்பு வாய்க்கப் பெற்றவன் **பராந்தகன்.** சோழ நாட்டை இவனுக்கு முன் ஒருவன் பராந்தகன் என்னும் பெயர் தாங்கி ஆண்டிருந்தான். ஆதலால் இவனுக்கு இரண்டாம் பராந்தகன் என்னும் பெயர் உண்டாயிற்று.

அவனுக்குச் சுந்தரசோழன் என்ற பெயரும் உண்டு. அவன் மனைவி வானவன்மாதேவி என்னும் பெயருடையவள்; அழகிற் சிறந்தவள்; கற்பில் அவளுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லையென்றே கூறலாம். அவள் கேரள தேசத்து அரசனுடைய மகள். வானவன்மாதேவி தன் கணவன் சொற்படி நடந்துவந்தாள். அவள் தான் செய்த புண்ணியத்தினால் இரண்டு ஆண் குழந்தைகளையும் ஒரு பெண் குழந்தையையும் பெற்றெடுத்தாள். மூத்த மைந்தனுக்கு ஆதித்தன் என்று பெயர். இரண்டாவதான பெண்ணுக்குக் குந்தவை என்று பெயர். மூன்றாவது மைந்தனுக்கு இராஜராஜ தேவன் என்றுபெயர். பராந்தகனும் அவன் மனைவியும் குழந்தைகளை அன்புடன் பாராட்டி வளர்த்து வந்தனர். குழந்தைகள் தகுந்த வயதை யடைந்த

தும், கல்வியால் மிக்கோரைக் கொண்டு அவர்கள் கல்வி கற்பித்தனர். மற்றும் அரசர்களுக்குரிய யானையேற்றம், குதிரையேற்றம், ஆயுதப் பயிற்சி முதலியவைகளையும் கற்பித்தனர். அரசிளங் குமரர்கள் அவற்றையெல்லாம் செவ்வையாகக் கற்றுவந்தார்கள். அவர்கள் கல்வி கேள்விகளிற் சிறந்த நுண்ணறிவும், ஆயுதப் பயிற்சியிற் சிறந்த பழக்கமு முடையவர்களாய்ச் சில ஆண்டுகளுக்குள் விளங்கினர். சுந்தர மேனியும் உரம் பெற்று விளங்கியதால், அவர்கள் சிங்கக் குருளைகளைப்போல் விளங்கினார்கள்.

பராந்தகன் சிறந்த கல்வியுடையவன். உருவிலும் திருவிலும் ஒப்புயர் வற்று விளங்கியவன் அவனே ; தன் கீழ் வாழுங் குடிகளுக்குப் பல விதங்களிலும் நன்மையையே புரியும் நற்குணம் வாய்ந்தவன். குடிகளுக்கு உண்டாகும் இடையூறுகளைத் தன்னுடையனவாகக் கொண்டு, விரைவில் நீக்கும் ஒப்பற்ற உயர்குணம் பொருந்தப் பெற்றவன் அவனே ; நீதி நெறியில் அணுவளவேனும் வழுவாது அரசாட்சி நடத்திய மன்னர்களுள் அவனும் ஒருவனாகப் போற்றிப் புகழப்பட்டவன். அவன் காலத்தில் குடிகள் அனைவரும் இன்புற்று வாழ்ந்துவந்தனர். அவன் ஆட்சியினால் குடிகள் அடைந்த நன்மைகள் பல. ஆதலின் அவனை அவர்கள் போற்றிக் கொண்டாடினர். நீதி நெறியினின்றும் ஒரு சிறிதும் தவறிடா மன்னன் ஆதலின், குடிகள் அனைவரும் பராந்தகனை ம னு வி ன் அவதாரம் என்றே

புகழ்ந்து கொண்டாடினர். குடிகள் நல்ல அரசனைக் கொண்டாடுவார்கள். கொடிய அரசனை வெறுப்பார்கள். கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டில் மக்கள் வாழ்வதைவிடப் புலி முதலிய துஷ்ட மிருகங்கள் வசிக்கும் காடு சிறந்த தாகும். பராந்தகன் நீதிமான் ஆதலால், குடிகள் இன்புற்று அவன் நாட்டிற் பல நன்மைகளையும் பெற்று வாழ்ந்துவந்தனர்.

பராந்தகன் தஞ்சாவூரைத் தன் நாட்டிற்குத் தலை நகராகக் கொண்டு அரசாண்டுவந்தான். அவன் புகழ் எங்கும் பரவியது.

## II. பாண்டியன் பொறுமை கொள்ளல்

தமிழ் நாடுகள் மூன்றில் ஒன்று பாண்டி நாடு. அந்நாடு சோழ நாட்டிற்குத் தெற்கே யுள்ளது. சிறந்த வகையிற் செல்வ முடையதும் அந்நாடே. 'பாண்டி நாடு முத்துடைத்து' என்று கூறுவர் பெரியோர். அந்நாட்டிற்குத் தலைநகர் மதுரை. அந்நாட்டை ஆண்ட மன்னர்களுக்குப் பாண்டியர்கள் என்று பெயர். பாண்டியர்கள் சந்திர வம்சத்து அரசர்கள். சோழர்களைச் சூரிய வம்சத்து அரசர்கள் என்று சொல்லுவது வழக்கம். சேர வரசர்கள் வானவ வம்சத்தினர். பாண்டியர் மிகுந்த பராக்கிரமம் வாய்ந்தவர்கள். அவர்கள் தமிழ்நாட்டில் மிக்க பழமையான காலந்தொட்டு வாழ்ந்துவருகிறார்கள். முன் காலத்தில் பாண்டியர்களில் ஒருவன் இருந்தான். அவன் பெயர் **சித்திராங்கதன்**. அவனுக்கு ஒரு மகள் உண்டு. அவள் பெயர் **சித்திராங்கதை**. நாம் பாரதக் கதையைக் கேட்டிருக்கிறோம் அல்லவா? பாரதத்தில் பாண்டவர்கள் ஐவரைப்பற்றியும் நாம் நன்றாய்ப் படித்துள்ளோம். பாண்டவர் ஐவரில் சிறந்த வீரனான அர்ச்சுனன் ஒருமுறை தேச யாத்திரை செய்தான். அக் காலத்தில் அவன் பாண்டி நாட்டிற்கு வந்தான். அவன்

வந்த காலத்தில்தான் சித்திராங்கதன் பாண்டி நாட்டை அரசாண்டுகொண்டிருந்தான். சித்திராங்கதன் அர்ச்சுனனது புகழையும் திறமையையுங் கேட்டுத் தன் மகள் சித்திராங்கதையை மணம் செய்வித்தான். இதனால் பாரதக் கதை நடந்த காலத்திலேயே பாண்டியர்கள் இருந்தார்கள் என்பது தெரிகிற தல்லவா? பாண்டியர் சீரும் சிறப்பும் வாய்ந்தவர்கள்.

சோழ நாட்டைப் பராந்தகன் அரசாண்டுவந்தான் என்று முன் படித்தோம் அல்லவா? அக்காலத்தில் பாண்டிய நாட்டை வீர பாண்டியன் என்னும் அரசன் அரசாண்டுவந்தான். அவன் மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டி நாட்டைப் பரிபாலித்துவந்தான். அவன் சிறந்த வீரன். ஆயுதப் பயிற்சியில் நெடுங்காலம் உழைத்துக் கற்று ஒப்பற்ற திறமையை யடைந்தவன். அவன் தோற்றம் கம்பீரமான ஆண் சிங்கத்தின் தோற்றத்தைப் போன்றதாகும். அவன் எதற்கும் அஞ்சாத நெஞ்சு படைத்தவன். அவனுக்குப் போர் புரிவதென்றால் மிக்க சந்தோஷம். அவன் அதனை ஒரு விநோத விளையாட்டாகக் கொள்வான். அவன் மிக்க பராக்கிரமசாலி என்பதைப் பலவரசர்கள் நன்கறிந்திருந்தார்கள். மற்றும் அவனிடத்தில் சிறந்த படைகளும் இருந்தன. அதனால் அவன் சிறிதும் அச்சமின்றிப் பாண்டி நாட்டை ஆண்டுவந்தனன். அவன் தன்னிடத்தில் உள்ள மிக்க படைவலியின் துணைகொண்டு பலவரசர்களைத் தனக்கு

அடங்கி நடக்கும்படி செய்துவந்தான்.

பராந்தகன் சோழநாட்டைச் சிறப்பாக ஆண்டு வந்ததைக் கேட்டு வீர பாண்டியன் அவனை வெறுத்தான். அவ்வெறுப்பு வீர பாண்டியனைத் தீ நெறியிற் புகுத்தியது. வீர பாண்டியனுக்குப் பராந்தகன்மேல் வெறுப்பு அதிகமாக ஏற்பட ஏற்பட அது அவனைப் பல்விதத் துன்பங்களுக் குள்ளாக்கி முடிவில் பகைமையைத் தோற்றுவித்தது. அதனால் வீரபாண்டியன் பராந்தகனைத் தன் விரோதியாகவே எண்ணினான். அப்பொழுது அவன் சும்மா இருக்க முடியுமா? பராந்தகனுக்குப் புகழ் வளர வளர வீரபாண்டியனுக்கு அவனிடத்திற் பகைமை வளர்ந்துகொண்டே வந்தது. அதனால் வீரபாண்டியன் எவ்வாறுவது பராந்தகனுக்கு உண்டாயிருக்கும் புகழை அழித்துவிடவேண்டுமென்று எண்ணினான். அதற்காக அவன் பலநாள் சிந்தித்துக்கொண் டிருந்தான். தீய காரியங்கள் புரிய மனம் விரைவில் நாடுவதைப்போல் நற்காரியங்கள் புரிய விரைவில் மனம் வருவதில்லை. மற்றும் தீய காரியங்கள் புரியத் தொடங்குகிறவர்களுக்குத் தக்க துணைவர்களும் வந்துசேர்கிறார்கள். அதனால் அவர்கள் தீத் தொழில்களை விரைவில் ஊக்கத்துடன் செய்து முடிவில் துன்புறுகின்றனர்.

வீர பாண்டியனுக்குச் சில துணைவர்கள் உண்டு. அவர்கள் தங்கள் காரியத்தைக் கண்ணுங் கருத்துமாகச் செய்து முடித்துக்கொள்வதிற் சமர்த்தர்கள்.

அவர்கள் அரசனது மன நிலையை யறிந்து அவ்வப்பொழுதிற்கு ஏற்ற விடைகளை அளிப்பவர்கள். வீர பாண்டியன் பராந்தகனிடத்துப் பகைமை கொண்டிருக்கும் இச்சமயத்தில் அவர்கள் தங்கள் காரியங்களை முடித்துக் கொள்ள சமயம் வாய்த்ததென்று அகமகிழ்ந்தது ஒரு வியப்போ? அவர்கள் வீர பாண்டியனிடம் தங்கள் விஷ வார்த்தைகளைக் கொண்டு பராந்தகனைப்பற்றிப் பலவாறு இழிவுபடுத்திக் கூறினர். அவனுக்கு அவர்கள் கூறிய யாவும் உண்மைபோன்று தோற்றின. ஆகவே வீர பாண்டியன் எவ்வாறேனும் பராந்தகனைப் பழிக்குள்ளாக்க வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டான். பராந்தகனைப் போரில் வென்று தனக்குச் சிற்றரசனுக்கிக் கொண்டாலன்றி வீர பாண்டியன் மனம் சமாதானத்தை யடையா தல்லவா?

வீர பாண்டியன் மனம் ஓயாது அல்லும் பகலும் துன்பப் பட்டுக்கொண்டே யிருந்தது. பராந்தகனை அழிப்பதற்கு வழி எது என்றே அவன் எண்ணிக் கொண்டிருந்தான். ஒருநாள் மாலைப்பொழுதில் வைகை யாற்றங் கரைக்கு வீர பாண்டியன் சென்றான். பகற் பொழு தெல்லாம் துன்பப்பட்டுக்கொண்டிருந்த அவன் சிறிது துன்பமற் றிருக்கலாம் என்றெண்ணியே அங்குச் சென்றான். வைகை ஒரு பெரிய அகலமுள்ள நதி. அதன் இரு கரையிலும் பூந்தோட்டங்கள் பல இருந்தன. அப்பூந்தோட்டங்கள் மிக்க அழகு பொருந்திய வைகள். மன்னன் தன் துணைவர்களோடு அத்தோட்

டத்திற்குட் சென்றான். அங்கு அனைவரும் புற்றரை மேல் அமர்ந்தனர். அங்குச் சென்றும் மன்னன் மனம் துன்பத்தினின்றும் விடுபட வில்லை.

சிறிது காலம்வரை அனைவரும் அப்பூந்தோட்டத்தின் அழகைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். மன்னன் துணைவர்கள் பேசியதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் ஒரு வார்த்தையும் பேச வில்லை. அவன் அறிவு ஏதோ ஆழ்ந்த சிந்தனை யில் நிலைத்திருந்தது. அந்நிலையைத் துணைவர்களும் அறிந்தனர்.

அவர்களில் ஒருவன் மன்னனைப் பார்த்துப் பின் வருமாறு கூறித் துன்ப நிவர்த்திக்கு வழியை யுண்டாக்கினான். அவன், "மன்னவ, நீங்கள் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருக்கின்றீர்கள். இவ்வாறு ஆழ்ந்த சிந்தனையில் பன்னெடு நாளாய்த் துன்புறுகின்றீர்கள் என்பதை நாங்கள் அறிவோம். அதனை எங்களுக்குத் தெரிவித்தால் ஒரு நொடியில் எப்பேர்ப்பட்ட துன்ப மாயினும் அகற்றி விடுவோம்" என்றான். அதனைக் கேட்ட வீரபாண்டியன் தன் கருத்தை வெளியிடத் துணிந்தான்.

வீர பாண்டியன், "அன்பர்களே, நம்மரபினரும் நாமும் பல நூற்றாண்டுகளாகப் பல்லவ அரசர்களாற் கஷ்டப்பட்டோம். இப்பொழுது ஒருவாறு அவர்கள் துன்பத்தினின்றும் விடுபட் டிருக்கிறோம். நம்மைப் போலவே சேர நாடும் சோழ நாடும் துன்பப்பட்டுக்

கொண்டிருந்தன. அவைகளும் இப்பொழுதுதான் விடுதலை யடைந்துள்ளன. இதற்குள் சோழநாட்டின் பெருமையும் இந்நாட்டு மன்னன் புகழும் எங்கும் பரவிவிட்டன. அவனை நாம் சும்மா விட்டுவிட்டால் ஒரு சமயம் அவன் நம்மையும் போரில் வென்றுவிடுவான். அப்பொழுது நாம் அவனுக் கடங்கிய அரசனாக இருக்க வேண்டும். அவ்வாறிருக்க என் மனம் ஒப்பவில்லை. அதனால் எப்படியாவது அவன் வலியைக் குறைத்துவிடுவது நம்முடைய க்ஷேமத்திற்குத் தக்க பாதுகாப்பாகும். எந்த வகையில் சோழன் நம்மைவிட மேலானவன்? இதுதான் என்னைத் துன்புறுத்துகின்றது" என்றான்.

பாண்டியன் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுள் ஒருவன் எழுந்து மன்னனை நோக்கினான். அவன் தோற்றத்தால் சிறந்த வீரன் என்று கூறுவதாற் குற்ற மில்லை. அவன், "அரசே, சிறிதும் அஞ்ச வேண்டாம். சோழனுக்குள்ள சேனைத் தொகை மிகவும் குறைவுடையதே யாகும். அவனிடம் போரிற் பழகிய வீரர்கள் சிலரே யுள்ளனர். நாளை, நாம் போர் தொடுத்துச் சென்றால் அவர்கள் நம்மை 'எதிர்க்க அஞ்சுவார்கள் என்பது உண்மை. நாம் படை வலி பெற்றுள்ளோம். நம் படை வீரர்கள் அனைவரும் அஞ்சா நெஞ்சு படைத்தவர்கள். போரில் வெற்றி கொள்ளுந் திறல் உடையவர்கள். நாளை படை யெடுத்துச் சென்று சோழனை வென்று, வெற்றியுடன் மீள்

வோம்'' என்று உரத்த குரலுடன் கம்பீரமாகச் சொன்ஞன். அதனைக் கேட்ட மற்றவரும், "அவ்வாறே செய்வோம்! அவ்வாறே செய்வோம் !'' என்றனர். மன்னனுக்கும் போர் புரிவதே தக்கது என்று தோற்றியது. அவனும் ஒருவித முடிவிற்குவந்தான். பின் அனைவரும் எழுந்து அரண்மனைக்குச் சென்ருர்கள்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும் அரசன் கொலு மண்டபத்திற்கு வந்தான். அங்கு அமைச்சர் முதலாயிஞேர் வந்திருந்தனர். அரசன் வந்ததும் அனைவரும் எழுந்து பணிந்தனர் ; பின் அவன் அனுமதியின்மேல் அவரவர்கள் இடத்தில் அமர்ந்தனர். அரசன் அவர்களை நோக்கித் தன் கருத்தை வெளியிட்டான். அமைச்சர்களும் மற்றவர்களும் அவன் கருத்தைக் கேட்டனர். அமைச்சர்களிற் சிலர் அவன் கொண்ட எண்ணம் நியாய மற்றது என்று பலமுறை எடுத்துக் காட்டினர். பலர் மன்னன் நினைத்ததே மாண்புடையது என்றனர். ஆதலால், அமைச்சர்களிற் சிலர் கூறிய நல்லுரை அவலமாயிற்று. அதனுல் அவர்கள் அரச சபையை விட்டு அகன்றனர். முடிவில் பாண்டியன் போருக்குச் செல்வதே தக்கதென்று முடிவு செய்யப்பட்டது. உடனே சேனைத் தலைவர்கள் அழைக்கப்பட்டனர். அவர்களும் அரசன்முன் வந்துநின்றனர். அரசன் அவர்களை நோக்கிச் சேனைகளைச் சித்தப்படுத்தச் சொன்ஞன். அரசன் கட்டளையை மேற்கொண்டு அவர்களும் அகன்றனர். அரசனும் கொலுமண்டபத்தை விட்டு

அரண்மனைக்குச் சென்றான். அனைவரும் தத்தம் இடத்திற்குச் சென்றார்கள்.

## III. தீமை செய்தார் தீமை பெறுவர்

வீரபாண்டியன் சேனைகளைத் திரட்டிக்கொண்டான். அவனிடத்தில் பெரிய சேனைகள் இருந்தன என்று முன் கூறினோம் அல்லவா? அச்சேனைகளின் வலிகண்டு அவன் மகிழ்ந்தான். அவனுக்குச் சோழனை வென்றுவிடலாம் என்னும் உறுதியும் ஏற்பட்டது. அவன் சேனைகளை நடத்திக்கொண்டு சோழனைப் போரிற் காணப் புறப்பட்டான். அவன் சேனைகளோடு விரைவிற் பாண்டிய நாட்டைக் கடந்து சோழ நாட்டு எல்லையைக் குறுகினான்.

பராந்தகனுக்குப் பாண்டியன் தன்னோடு யுத்தத்திற்கு வரும் செய்தி எட்டிற்று. பாண்டியன் போருக்கு வருதல் அவனுக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணிற்று. ஏன் எனில், சோழன் பாண்டியனிடம் சிறிதளவும் பகைமை பாராட்டினவன் அல்லன். பாண்டியன் போருக்கு வருதலை அறிந்ததும் பராந்தகனும் தன் சேனைகளைச் சித்தப்படுத்திக்கொண்டான். சேனைகளைத் திரட்டிக்கொண்டு பராந்தகன் பாண்டியனைத் தன் நாட்டு எல்லைக்குள் வரவொட்டாமல் தடுப்பதற்கு முன் சென்றான். இருவர் படைகளும் சேவூர் என்னும் இடத்திற் சந்தித்தன. இருவர் படைகளும் போர் புரியத் தொடங்கின.

யுத்தம் மிகக் கடுமையாகத் தோற்றியது. எங்கும் பிணக் குவியல்கள் காணப்பட்டன. யானைகளும் குதிரைகளும் வெட்டுண்டு தரைமேல் விழுந்துகிடந்தன. இரத்தம் ஆறு என்று சொல்லும்படி பெருக்கெடுத்து ஓடிற்று. எங்கும் வில், வாள், வேல், கத்தி, கேடயம் முதலிய ஆயுதங்களின் பயிற்சியே காணப்பட்டது. வீரர்கள் ஒரு சிறிதும் அஞ்சாது ஒருவர் மற்றொருவரைத் தாக்கிப் போர் புரிந்தனர். அப்போர் கண்டார் நடுங்கும் தன்மைத்தா யிருந்தது. எவர்க்கும் வெற்றி தோல்வி யின்றிப் போர் ஒரே மாதிரியாகச் சிலநாள் வரையிலும் நடைபெற்றது.

வீர பாண்டியன் மிக்க கோபத்தோடு போர் புரிந்தான். அவன் எவ்வாறுயினும் சோழனைக் கொன்று விடவேண்டும் என்று உறுதிகொண்டான். அதனால் அவன் தன் சேனைகளைப் பலவாறு முறைப்படுத்தி வைத்திருந்தான். சோழன் சேனைகளுக்கு வீர பாண்டியன் படைகள் எத்திக்கிலும் காணப்பட்டன. ஒரு நாள் இரண்டு மூன்று முறை சோழனையும் அவன் படைகளையும் புறங்காட்டி ஓடும்படித் துரத்திவிட்டு, தன்னுடைய ஒரு பகுதிப் படையை ஒரு கவர் இடத்தில் வைத்துச் சிறிது பின்னிடைந்தான் வீர பாண்டியன். அச் சூழ்ச்சியினைப் பராந்தகன் அறியவில்லை. வீர பாண்டியன் பின் நோக்கிச் செல்வதைச் சோழன் கண்டான். அவன் அதுதான் தக்க தருணம் என்று நினைத்து வீர பாண்டியனைத் துரத்திச் சென்றான்.

சென்றவன் நெடுந்தூரம் வந்துவிட்டான். வீர பாண்டியனால் மறைத்து வைக்கப்பட்டிருந்த படை ஒருபுறம் வந்து தாக்கியது. அவ்வாறு தாக்கியது சோழனுக்கு ஒரு விதமான திகைப்பினையும் ஆச்சரியத்தையும் உண்டாக்கியது. விரைவில் நான்கு பக்கங்களிலும் வீர பாண்டியன் படைகளாற் சோழன் படை சூழப்பட்டிருத்தலைப் பராந்தகன் உணர்ந்தான். எவ்வகையிலும் தப்பிப் பிழைத்தற்கு வழி இல்லை என்பதையும் அவன் நன்குணர்ந்து கொண்டான். வீர பாண்டியனுக்கும் பராந்தகனுக்கும் அங்கே கடும்போர் நடந்தது. இரு பக்கத்தாரும் தங்கள் தங்கள் வல்லமையைத் தோற்றுவித்தார்கள். முடிவில் யுத்தம் மிகக் கோரமாயும் குரூரமாயும் முடிந்தது. வீர பாண்டியன் தன் ஒப்பற்ற சூழ்ச்சியினால் பராந்தகனைப் போரில் வெட்டி வீழ்த்தினான். வீர பாண்டியனுக்கே வெற்றி கிடைத்தது. சோழன் சேனை சிதறி ஓடலாயிற்று.

வீர பாண்டியன் வெற்றி பெற்றான்; ஆயினும் சோழ நாட்டைக் கைப்பற்ற முடியவில்லை. அவன் சேனை வீரர்கள் இக்கடும்போரில் மிகவும் துன்பப்பட்டனர். ஆதலால் தஞ்சாவூரை முற்றுகையிட மறுத்துவிட்டனர். வீர பாண்டியன் மிகக் களைப்புற்றிருந்ததால் அம்மட்டோடு மதுரையை யடைந்தான். என்றாலும் அவன் மனம் ஒருவாறு திருப்தி யடையாமலேயே யிருந்தது. ஆனால் ஒருவாறு பராந்தகனைப் போரிற் கொன்றதால் சந்தோஷ முடையவனுகவே

வீர பாண்டியன் காணப்பட்டான். பாண்டி நாட்டோர் அவனைப் புகழ்ந்தனர்.

சோழ நாடெங்கும் பராந்தகன் போரில் கொல்லப் பட்ட செய்தி பரவிற்று. அது கேட்டுத் துன்பப்படா தார் ஒருவருமே யில்லை என்று கூறலாம். வானவன் மாதேவி பட்ட துயருக்கு அளவே யில்லை. ஆதித்தன், குந்தவை, இராஜ இராஜன் ஆகிய அவனுடைய மூன்று மக்களும் பெருந் துன்பத்திற் காளாயினர். பராந்தகன் உடலைத் தஞ்சைக்குக் கொணர்ந்து, அங்கு ஈமக் கடன்களை முடிப்பதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டன. வானவன் மாதேவி தன் தணவன் இறந்தபின் ஒரு நிமிஷமும் உயிர்வாழ விரும்ப வில்லை. ஆதலால் அவள் சககமனம் செய்தாள். சககமனம் என்றால் புருஷனை எரிக்கும் நெருப்பிலேயே மனைவி யும் விழுந்து உயிர் விடுவது. அவ்வனைக் கண்டும் கேட் டும் வருந்தாதார் இல்லை. வானவன் மாதேவியின் அரிய செயலைக் கேட்டுக் கண்ணீர் விடாதவர்கள் இல்லை. இளம் பருவமுடைய மூன்று குழந்தைகளும் தாய் தந்தை அற்றவர்கள் ஆயினர். பராந்தகனுடைய பெரிய தகப்பன் மகனை மதுராந்தகன் என்பவனால் அம்மூவரும் காப்பாற்றப்பட வேண்டியவர்கள் ஆயினர்.

சோழ நாட்டை ஆளுவதற்குத் தக்க பருவமு டைய மகன் பராந்தகனுக் கில்லை. ஆதலால் மதுராந் தகனே அரசாண்டு வந்தான். அவனுக்கு உத்தம

சோழன் என்று மற்றொரு பெயரும் உண்டு. மது ராந்தகன் பராந்தகன் மக்களை அன்பாய்ப் பாது காத்து வந்தான். மதுராந்தகனுக்கு வீரபாண்டியனைப் போரில் வென்று பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்னும் விருப்பம் உண்டாயிற்று. அதனால் அவன் தான் அரசனானதும் படைகளைச் சேகரிப்பதில் கண் ணுங் கருத்துமாக இருந்தான். மதுராந்தகன் சில ஆண் டுகளுக்குள் சிறந்த படைகளைத் திரட்டிக்கொண்டு வீர பாண்டியனோடு போர் புரியச் சென்றான். அக் காலத்தில் பராந்தகன் மகனான ஆதித்தன் இளம் பருவத்தின னாயினும் சிறந்த போர்த்தொழிலை நன் குணர்ந்திருந்தான். மதுராந்தகன் வீர பாண்டியனைத் தன் முழுப்படை வலிகொண்டு எதிர்த்தான். வீர பாண்டியன் சிறிதும் அஞ்சாது போர் புரிந்தானே னும் மதுராந்தகனாற் சிறையாகப் பிடிக்கப்பட்டான். அச்சமயம் ஆதித்தன் தன் தந்தையைக் கொன்ற பாத கன் தலையை வெட்டிப் பந்தாக உருட்டி விளையாடி னான். அந்தோ! பாவம்!! வீர பாண்டியன் நிலை யாதாயிற்று? தீமை செய்தார் தீமை பெறுவர் என்பது உண்மையே யன்றோ? இளம் பிள்ளையா யிருந்தாலும் ஆதித்தன் மனம் வீர பாண்டியன் தலையைப் பந்தாக உருட்டி விளையாடிய பிறகுதான் ஒரு நிலைக்கு வந்தது. மதுராந்தகன் பழிக்குப்பழி வாங்கிவிட்டுத் தஞ்சையை யடைந்து குடிகளுக்குப் பல நன்மைகளைப் புரிந்து சோழ நாட்டை ஆண்டுவந்தான். பராந்தகன் மக்கள்

மூவரும் அவனிடத்தில் வளர்ந்துவந்தனர். அவனும் அவர்களுக்குச் செய்ய வேண்டியவற்றை உரிய காலங்களிற் செய்துவந்தான்.

## IV. இளவரசன்

இவ்வாறிருக்கையில் ஆதித்தன் இறந்துவிட்டான். அவன் இறந்தது மதுராந்தகனுக்கு மிக்க வருத்தத்தைத் தந்தது. அரசராயினும் ஒருநாள் இறந்துபோதல் திண்ணம். பின், மதுராந்தகன் குந்தவையையும் இராஜ ராஜனையும் மிக்க ஜாக்கிரதையோடும் அன்போடும் பார்த்துவந்தான். அவர்களும் நாளுக்கு நாள் கல்வி கேள்விகளிற் சிறந்தவர்களாய் விளங்கி வந்தனர். இராஜ ராஜன் உருவத்திலும் தோற்றத்திலும் கல்வியிலும் ஆயுதப் பயிற்சியிலும் இணையற்றவனாக விளங்கினான். அவனைப்பற்றிச் சோழ நாட்டோர் புகழ்ந்து சொல்லிக்கொண் டிருந்தனர். அவன் மதுராந்தகனிடத்தில் நிறைந்த அன்பும் உயர்ந்த மதிப்பும் வைத்திருந்தான். இராஜ ராஜன் கீழ்ப்படிந்து நடத்தலில் மதுராந்தகனைத் தந்தையாகவே கொண்டு நடந்துவந்தான். அவனது ஒப்பற்ற தோற்றப் பொலிவையும், நுண்ணறிவையும் கண்டு சோழ நாட்டார் அவனை அரசனாக வேண்டினர். அவனை அரசனாக்கிவிட அவர்கள் பெரு முயற்சிகளும் செய்தனர். அவையெல்லாம் மதுராந்தகனுக்குத் தெரியலாயின. அவனுக்குச் சோழநாட்டைத் தன் வாழ்நாள் அளவும்

ஆளவேண்டும் என்னும் விருப்பம் இருந்தது. அவ்விஷ யம் இராஜ ராஜனுக்கும் தெரியலாயிற்று.

மதுராந்தகன் குந்தவை மணப் பருவம் அடைந்த தும் தக்க நாயகனைத்தேடி மணம் புரிவித்தான். அவ ளுக்கு வேண்டிய சீரும் சிறப்பும் பெருமையாக அளித் தான். இராஜ ராஜனுக்குத் தந்தி சக்தி விடங்கி என் பாளை மணம் செய்து வைத்து, அவனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டினன். இவ்வாறு மதுராந்தகன் பராந் தகன் மக்களைக் காப்பாற்றிக்கொண்டு நாட்டை ஆண்டு வந்தான்.

இராஜ ராஜன் கூரிய அறிவுடையவனுகவும், பராக் கிரம சாலியாகவும் விளங்கினன். அவன் மதுராந்தக னுக்குப் பல வகைகளிலும் உதவி புரிந்து கொண்டு வந்தான். குடிகள் இராஜ ராஜனை அரசனுக்கிவிட வேண்டு மென்று கருதினர். ஏனெனில் மதுராந்தக னுக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் **கண்ட ராதித்தன்.** ஒரு சமயம் அரசுரிமையை இராஜ ராஜ னுக்கு அளிக்காமல் தன் மைந்தனுக்கு அளித்து விட் டால் என்ன செய்வது 'என்று அவர்கள் அஞ்சினர்கள். ஆனல் மதுராந்தகனுக்கு அத்தகைய எண்ணம் இல் லவே இல்லை. மற்றும், அவன் மைந்தனை கண்டரா தித்தனும் அரசாட்சியைப் பெறவேண்டும் என்று விழைவு கொள்ளவில்லை. அவன் தன் வாழ்நாளை இறை வனை அறிந்து வழிபட்டுத் துறவியாய் இருந்து கழிப் பதில் செலவழிக்க நினைத்தான். நினைப்பே காரியங்க

ளின் முடிவிற்கு அடிப்படை. எது மனத்தில் அடிக்கடி தோன்றி நம்மை தன் வழியில் இழுத்துக் கொள்ளு கிறதோ அது முடிவு பெறுவதையும் நாம் அறிகிறோம். அதனால்தான் நாம் அற்ப விஷயங்களைப் பற்றி அடிக்கடி நினைக்கக் கூடாது. கண்டராதித்தன் தமிழ் உலகம் புகழும் ஒரு முனிவனாய் விளங்கினான். அவனைக் கண்ட ராதித்த தேவர் என்பர். அவரே திருவிசைப்பா பாடியவர்.

முடிவில் குடிகள் பலவாறு முயன்றும் மதுராந் தகனைத் தள்ளிவிட்டு இராஜ ராஜனை அரசனாக்க முடிய வில்லை. இராஜ ராஜன் அவ்வாறு அரசனாகவும் ஒப்புக் கொள்ள வில்லை. மதுராந்தகன் ஆட்சியை வெறுத்த பிறகேதான் அதனைக் கொள்வதாக இராஜ ராஜன் கூறி னான். ஆதலால் குடிகளின் எண்ணமும் முயற்சியும் வீணாயின. மதுராந்தகன் கி. பி. 985-இல் இறந்தான். அதுவரை இராஜ ராஜன் இளவரசனாகவே யிருந்து வந்தான்.

இராஜ ராஜன் இளவரசனா யிருக்குங் காலத்தி லேயே அவனுக்கு ஒரு மைந்தன் பிறந்தான். அவ னுக்கு இராஜேந்திரன் என்று பெயரிட்டு மிக்க அன் பாய் இராஜ ராஜன் வளர்த்து வந்தான். பின் ஒரு பெண் குழந்தையும் பிறந்தது. அவன் அக் குழந்தைக்குக் குந்தவை எனப் பெயரிட்டு வளர்த்துவந்தான். இரா ஜேந்திரன் வளர் பிறைச் சந்திரனை யொப்பவும், சான் றோர் நட்பினை யொப்பவும் நாளுக்கு நாள் உருவிலும்

திருவிலும் உயர்ந்து வளர்ந்தான். மைந்தன் தக்க பருவம் அடைந்தாலும் அவன் அவனுக்குக் கல்வி கற்றுக் கொடுக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்தான். அரசர்களுக்குரிய ஆயுதப் பயிற்சிகளையும் அவன் பயிற்றுவித்தான். அரசிளங் குழந்தையும் கல்வியிலும் ஆயுதப் பயிற்சியிலும் மேம்பட்டு விளங்கியது.

மைந்தனும் மகளும் வாய்க்கப்பெற்ற இராஜ ராஜன் தனக்குரிய அரசாட்சியைத் தான் அடையும்படி குடிகள் வற்புறுத்தியும் வேண்டாது, தன் சிறிய தந்தை நாடாட்சியைத் தனக்கு அளிக்கும்வரை அவரையே அரசாளும்படி விட்டுவிட்டுத் தான் இளவரசனாய் இருந்தது அவனது ஒப்புயர்வற்ற உத்தம குணத்தை விளக்குவதன்றோ?

## V. இராஜ ராஜன் நிலை

கிறிஸ்துவிற்குப் பின் 985 வருஷத்தில் இராஜ ராஜன் சிங்காசனம் ஏறினன். அதாவது இற்றைக்குத் தொள்ளாயிரத்தி நாற்பத்தி நான்கு வருஷங்களுக்கு முன்னாகும். அவன் அரசனானதும் **இராஜ கேசரி** என்னும் பட்டத்தைப் பெற்றான். அவன் கல்வி கேள்விகளிற் சிறந்தவன் என்று முன்னமேயே கூறினோம். சோழநாடு பல்லவர்களின் துன்பத்தினின்றும் விடுபட்டுச் சில ஆண்டுகளே ஆயினதால் செவ்வையான அரசாட்சியையடைய முடியவில்லை. மற்றும் இடை இடையே துன்பங்களும் போர்களும் தோன்றின. அவற்றையெல்லாம் இராஜ ராஜன் நன்கறிந்தான். அவன் அரசன் ஆனதும் இராஜ்யத்தை நல்ல நிலைமைக்குக் கொண்டுவரவேண்டும் என்னும் எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று. அதனால் அவன் முதல் பத்து வருஷகாலம், கி. பி. 995 வரை, சோழநாட்டைப் பலப்படுத்திக்கொள்வதிற் பெரிதும் முயன்று வந்தான்.

இராஜ ராஜன் போர்த் தொழிலிற் சிறந்த திறமை வாய்ந்தவன். அவன் தன் நாட்டைப் பாதுகாப்பதற்காகப் பெரிய சேனைகளைத் திரட்டினன். யானைப் படை, குதிரைப்படை, காலாட்படை, கப்பற்படை

முதலியன அவனிடத்தில் நிறைந்திருந்தன. அப்பத்து வருஷங்களில் அவன் குடிகளுக்குப் பல நன்மைகளைப் புரிந்தான்; அரசாங்கத்திற்கு வருவாயை அதிகப்படுத்திக் கொண்டான்; அவன் தன் நாட்டைப் பகைவர்கள் எதிர்க்க முடியாத நிலையில் அங்கங்கே சேனைகளை வைத்திருந்தான். அதனால், அவன் ஆட்சியில் குடிகள் அச்சமின்றி வாழ்ந்தனர். அவனை அனைவரும் கொண்டாடினர்.

இராஜ ராஜன் புகழையும் பேராற்றலையும் கேட்டுப் பல மன்னர் அவன் நட்பையும் உறவையும் கொண்டனர். அவ்வாறு உறவுகொண்ட மன்னர்களிற் சிலர் அவனைத் தமக்கு மருமகனாக்கிக்கொண்டனர். அம்முறையில் இராஜ ராஜன் தன் முதல் மனைவியைத் தவிர நால்வரை மணந்துகொண்டான். திரைலோக்கிய மாதேவி என்பது ஒரு மனைவியின் பெயர். மற்றொருத்தி பெயர் பஞ்சவன்மாதேவி. ஒருத்தி அபிமான வல்லி என்னும் பெயருடையவள். ஒருத்தி சோழமா தேவி என்னும் பெயர் புனைந்தவள். ஆனால் தந்தி சக்தி விடங்கியே பட்ட மகிஷியாயிருந்தாள். ஐவர்களும் ஒற்றுமையாய் வாழ்ந்துவந்தனர். இராஜ ராஜன் ஐவர்களையும் ஒரே விதமாகப் பாவித்துவந்தான்.

இராஜ ராஜனிடத்தில் அப்பிரமேயன் என்னும் தளகர்த்தன் ஒருவன் இருந்தான். அவன் சிறந்த வீரன்; எதற்கும் அஞ்சா நெஞ்சு படைத்தவன்; போரிற் பகைவர்களை ஒரு நொடியிற் புறங்காட்டி ஓடும்படி

செய்பவன்; சேனைகளைப் போர்க் களத்தில் நடத்திக் கொண்டு செல்வதில் வெகு சமர்த்தன். அவனை இராஜ ராஜன் மிக்க அன்புடன் ஆதரித்து வந்தான். அவனே சோழ வரசனான இராஜ ராஜன் படைவலியை மிகுதிப் படுத்தியதற்கு முதற் காரணமானவன். அவன் துணை கொண்டே முதலில் இராஜ ராஜன் படையெடுத்துச் சென்று புறநாட் டரசர்களைப் போரில் தோற்கடித்து, வெற்றிகொண்டு வருதற் கெண்ணினன். கி. பி. 995-இல் இராஜ ராஜன் நாட்டிற்கு வேண்டியன யாவும் செய்து முடித்துப் படை யெழுச்சிக்கு வேண்டியவற்றில் முயற்சி செய்தான்.

கி. பி. 995-இல் சேர நாட்டை ஒரு சேரமன்னன் அரசாண்டு வந்தான். அவன் நாட்டிற்குச் சிறந்த துறை முகப் பட்டினமாய் விளங்கியது காந்தளூர். அவன் அவ்வூரில் படையை நிறுத்தி எளிதில் வேற்றரசர் தன் நாட்டிற் புகாதபடி காத்து வந்தான். அவனிடத்தில் கப்பற் படையும் இருந்தது. அதனால் சேரன் செருக்குற்றிருந்தான்.

பாண்டி நாட்டில் மதுரையைத் தலைநகராகக் கொண்டு அக்காலத்தில் அரசாண்டவன் அமர புஜங்க பாண்டியன். அவனுக்குச் சோழன் மீது பகைமை யுண்டு. சோழனது முன்னேற்றத்தைக் கருதி அவன் பொறுமை கொள்ளாதிருக்க முடியவில்லை. வீர பாண்டியனைக் கொன்ற சோழர் குடியை அழித்துவிட வேண்டும் என்று அவன் முயன்றான். அதனால் அப்

பாண்டியன் சேனைகளைத் திரட்டியும் மற்ற அரசர்களைத் தனக்குத் துணைவரும்படி வேண்டியும் தன் நிலைமையை மேம்படுத்திக்கொண் டிருந்தான்.

இவ் விஷயங்கள் எல்லாம் இராஜ ராஜனுக்குத் தெரிந்தன. இராஜ ராஜன் தான் அரசனானதுமே தன் நிலைமையையும் மேம்படுத்திக்கொள்ள விரும்பினான் என்று கூறினோம் அல்லவா? அவனுக்குச் சேர பாண்டியர்கள் இருக்கும் நிலை தெரிந்ததும் அவர்களை எவ்வாறாயினும் போரில் வென்று வரவேண்டும் என்று அவன் எண்ணினான். அப்பிரமேயனைக் கூப்பிட்டு அவன் கருத்தையுங் கேட்டான். அவன் தண்டெடுத்துச் செல்லுதலே தக்கதென்று கூறினான். இராஜ ராஜன் சேர நாட்டின்மீது படை யெடுத்துச் செல்ல முயன்றனன்.

# VI. படை யெழுச்சி

ஒருநாள் இராஜ ராஜன் அப்பிரமேயனைக் கூப்பிட்டுத் தன் கருத்தை வெளியிட்டான். அப்பிரமேயன் சேனைகளெல்லாம் சித்தமாய் உள்ளனவென்றும், யுத்தம் செய்தற்குத் தக்க காலமும் அதுவே என்றும் கூறினன். அதனைக் கேட்டதும் இராஜ ராஜன் போருக்குப் புறப் படும்படி உத்தர வளித்தான். அப்பிரமேயன் சேனை களைத் திரட்டி அணிவகுத்துப் போருக் கெழுந்தான். இராஜ ராஜன் போர்க்கோலம் பூண்டு யுத்தத்திற்குச் செல்ல முன் வந்தனன்.

இராஜ ராஜன் தான் போர் புரியத் தொடங்கு முன் சேரனிடம் ஒரு தூதனை அனுப்பினன். தூதன் விரைந்து சென்று சேரனைக் கண்டான். அவன் சேர னிடத்தில், "மன்ன! சோழன் திரண்ட படையோடு உன்னுடன் பொருதற்கு வந்திருக்கின்றான். நீ அவனை உன் தலைவனாகக்கொண்டு பணிந்து கப்பங் கட்டி வரு வருவாயேயானல் அவன் உன்னை ஒரு தீங்குமின்றி விடுத்துச் செல்வான். அவன் போரில் பகைவர்களை அழிக்கும் திறல் உடையவன். பல்யானைக் குழாங் களுடைய அவனை ஒருவாற்றாலும் உன்னால் போரில் வெல்ல முடியாது. ஆதலின், அவனைப் பணிந்து

அவன் சிற்றரசனுக வீற்றிருத்தலே சாலச் சிறந்த தாகும்'' என்றனன். தூதுவன் கூறிய கடுமொழிகள் சேரனுக்கு மிக்க துன்பத்தை விளைத்தன. சோழன் படை யெடுத்து வந்தது அவனுக்குத் திகைப்பினை உண்டாக்கியது. என்றாலும் அவனைப் பணிந்து அவனுக்குக் கப்பங் கட்டும் சிற்றரசனுக இருக்கச் சேர னுக்கு இஷ்டமில்லை. ஆதலால் சேரன் தான் சோழனை எதிர்த்துப் போர்புரிய வருவதாகக் கூறி விடுத்தனன்.

சேரன் தன் படைகளைத் திரட்டிக் கொண்டு காந்தளூர்க் கடற்றுறை முகத்திற் சோழனை எதிர்க்கக் காத்துக்கொண்டிருந்தான். தூதன் சேரனிடமிருந்து மீண்டு சென்று சோழனிடம் சேரன் மொழிந்தவற் றைக் கூறினன். உடனே சோழன் அப்பிரமேயனு டைய துணை கொண்டு படைகளோடு புறப்பட்டுக் காந்த ளூர்க்குச் சென்றான். சோழன் பெரும் படையுடன் வருதலைச் சேரன் கண்டான். சேரன் தன்னை எதிர்க் கத் துணிந்து நிற்றலைச் சோழனும் அறிந்துகொண்டான். சோழன் படைத்திரள் காந்தளூர்க் கடற் றுறையை நெருங்கிற்று. சேரன் மிக்க வீரத்தோடு தன் போர் வீரர் களை உட்சாகப்படுத்திச் சோழன் படையை எதிர்த்துப் போர் புரிய உத்தரவு கொடுத்தான். இரு திறத்தார் சேனைகளும் ஆரவாரித்து எழுந்தன. போரும் தொ டங்கிற்று.

இரு பக்கத்தாரும் மூண்டெழுந்த சினத்தால் கடும் போர் விளைத்தனர். இருவர் படைகளும் மிக்க சீற்றத்

மீதோடு எதிர்த்துப் பொருதன. சேரன் படையிலும் சோழன் படையிலும் வீரர் பலர் உயிர் துறந்தனர். சோழன் மேன்மேலும் படைகளைச் செலுத்திக்கொண்டு போர் முனைக்குச் சென்று ஊக்கங் குன்றாது பொருதான். சேரனும் முன் வந்து சண்டை செய்தான். என்றாலும் அவனுக்கு மனத்தளர்ச்சி யுண்டாயிற்று. சோழன் படைகளாற் சேரனுக்குப் பெருநஷ்டம் உண்டாயிற்று. காந்தளூர் சின்ன பின்னமாகத் தகர்த்தெறியப் பட்டது. துறைமுகம் இருந்த விடம் தெரியாமல் மறைந்துபோயிற்று. பல கப்பல்கள் நாசமாக்கப்பட்டன. முடிவில் சேரன் படை சிறிது சிறிதாகக் குறைவுபடலா யிற்று. சேரன் தனக்கு வலி குறைவது கண்டும் விடாது சண்டை செய்தான். முடிவில் சோழன் வெற்றி கொண்டான்.

சேர நாட்டரன் போரில் தோல்வி யடைந்தான். சோழன் அவனைத் தனக்குக் கப்பம் கட்டும் ஒரு சிற் றரசனாக்கி அவனாற் கொடுக்கப்பட்ட பல விலை உயர்ந்த பொருள்களைப் பெற்றுக்கொண்டு தன் ஊர்க்குத் திரும் பினான். ஆனால் அவன் நேரே தன் ஊரை யடைய முடியவில்லை. குடகு முதலிய நாடுகளில் உட்கலகங்கள் இருந்தலையும் அவன் அறிந்தான். அதுதான் அவர்க ளைப் போரில் வெல்வதற்குத் தக்க தருணம் என்று அவன் நன்றாய் உணர்ந்து கொண்டான். காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டு மல்லவா ? அதனால் அவன் அவர்கள்மீது படை யெடுத்துச் சென்றான்.

ச்சோழன் போருக்கு வருதலை அவர்கள் அறிந்து அவனை எதிர்த்தார்கள். சோழன் சிறிதும் அஞ்சாது அவரவர் களை அங்கங்கேயே தடுத்துக் கடும்போர் விளைத்தான். அவர்களும் தங்களால் இயன்ற மட்டும் ஊக்கத்தோடு போர் புரிந்தார்கள். என் செய்யினும் என்னே! சோழனுக்கு நல்ல காலம் உள்ளவரையிலும் அவர்கள் அவனை யாது செய்யக்கூடும்? எங்கும் வெற்றிக்கு மேல் வெற்றி: சோழன் படை ஒரு நாளேனும் ஓரிடத்தேனும் தோற்றோடியதே இல்லை. முடிவில் அவர்கள் அனைவரும் சோழனால் வெல்லப்பட்டார்கள். அவர்கள் சோழனுக் குச் சிற்றரசர்களாக இருந்துகொண்டு, கப்பங் கட்டி வருவதாக ஒப்புக்கொண்டனர். சோழன் வெற்றி யோடு வருகையில் கங்கபாடி அரசனையும் போரில் வெல்ல வேண்டியதாயிற்று. இப்போர்களில் அப்பிர மேயன் சிறந்த உதவி புரிந்துவந்தான்.

இராஜ ராஜன் தன் படையோடு திரும்பி வருகை யில், கங்கபாடியை ஆண்ட ஓர் அரசன் தன் படை யோடு வந்து அவனை எதிர்த்தான். அதனால் இராஜ ராஜன் அவனையும் போரில் வென்று செல்லவேண்டியது அவசிய மாயிற்று. கங்கபாடி என்பது மைசூர் ஜில்லா வின் கீழ்ப்பாக முழுவதும் ஆகும். அதற்குச் சுற்றுப் புறங்களிலு முள்ள நாடுகளும் அதனைச் சார்ந்தனவே. அக்கங்கபாடியைக் கங்க வம்சத்தரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவனைப் போசள ராஜன் என்பாரும் உண்டு. தழைக்காடு என்னும் ஊரை அப்போசள

ராஜன் தலை நகராகக் கொண்டிருந்தான். தழைக்காட்டிற்கு அருகில் **கலியூர்** என்ற ஓரூர் உண்டு. போசளன் மந்திரிகளாகிய **நாகண்ணன், மஞ்சிகன், காலிகன், நாகவர்மன்** என்பவர்களின் துணை கொண்டு திரண்ட படையோடு சென்று கலியூர் என்னும் இடத்திற் சோழனை எதிர்த்தான். சோழனுக்கும் போசளனுக்கும் படைவலி சிறந்திருந்தமையினால் நெடு நாள் வரைக்கும் போர் நடை பெற்றது.

சோழன் அப்பிரமேயன் துணை கொண்டு தன் படைகளை வெகு திறமையுடன் நடத்திப் போர் புரிந்தான். நாகண்ணன், மஞ்சிகன், காலிகன், நாகவர்மன் முதலாயினோரை இராஜ ராஜன் போரிற் கொன்றான். ஆனால் அவனுக்கு இடையில் ஒரு துன்ப முண்டாயிற்று. அப்பிரமேயன் பகைவர்களாற் போரில் கொல்லப்பட்டான். என்றாலும் சோழன் சிறிதும் மனத்தளர்ச்சி யடையாது போசள அரசனை வென்றான். தழைக்காடு இராஜ ராஜன் கைப்பட்டது.

கங்கபாடியைக் கைப்பற்றிக் கொண்டதும் இராஜ ராஜன் தழைக்காட்டிற்கு இராஜ ராஜபுரம் என்று பெயர் கொடுத்தான். அன்று முதல் அவ்வூர் அவன் பெயரால் வழங்குவதாயிற்று.

வடக்கே **வேங்கை** நாடு என்று ஒரு நாடு இருந்தது. அது தற்காலம் கோதாவரி கிருஷ்ணா ஜில்லாக்களாயிருக்கும் நாடாகும். அதனைக் கீழைச் சளுக்கிய வம்சத்தினர் அரசாண்டு வந்தனர். இராஜ ராஜன்

காலத்திற்குச் சற்று முன் தொடங்கி அந்நாட்டில் உட்கலகங்கள் உண்டாயின. இராஜ ராஜன் காலத்தில் அதனை விமலாதித்தன் என்பவன் அரசாண்டுவந்தான். அவன் கலியாணபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்துவந்தான். விமலாதித்தன் பலவகையிலும் உட்கலகங்களை யடக்க முயன்றும் பயன்படாமற் போயிற்று. இந்த நிலைமையை இராஜ ராஜன் உணர்ந்தான்.

இராஜ ராஜன் மைந்தனாகிய இராஜேந்திரன் சிறந்த போர் வீரனாக விளங்கினான். தந்தை போர்க்குச் சென்றிருந்ததால் அவன் தஞ்சாவூரி லிருந்துகொண்டு எவ்வகையிலும் சோழ நாட்டிற்கு இடையூறு வராதபடி காத்துவந்தனன். இராஜ ராஜனுக்கு வேங்கை நாட்டினுடைய நிலை தெரிந்ததும் அந்நாட்டை ஒரு பெரும் படையுடன் சென்று ஜயித்து வரும்படி தன் மைந்தன் இராஜேந்திரனை யனுப்பினான். அவன் அவ்வாறே சென்று சளுக்கிய அரசனை விமலாதித்தனை வென்று சிறையாகப் பிடித்துக்கொண்டு தஞ்சாவூருக்கு வந்தனன். வேங்கை நாட்டில் தன் பிரதிநிதியையும் அவன் ஏற்படுத்தினன்.

இராஜ ராஜன் இவ்வாறு வெற்றிக்குமேல் வெற்றியொடு திரண்ட படையுடன் வருகையில் அவனை அமரபுஜங்க பாண்டியன் பெரும்படையுடன் வந்து எதிர்த்தான். அவன் படையொடு வந்து தடுத்தது இராஜ ராஜனுக்கு ஆச்சரியத்தையேனும் திகைப்பையேனும்

உண்டாக்கவில்லை. தன் படை வீரர்கள் கடும் போர்கள் பல புரிந்து களைத்திருப்பதை இராஜ ராஜன் நன்குணர்ந்திருந்தான். என்றாலும் பாண்டியனோடு நட்புக்கொள்ள அவன் விரும்பவில்லை. ஆதலால் அவன் தன் படை வீரர்களுக்கு நன் மொழிகள் பல புகன்று வீரத்தை யூட்டிப் போர் புரியும்படி சொன்னான். அவர்கள் புதியதோர் உணர்ச்சி பெற்றவர்களாய்த் தம்மை மறந்த நிலையிற் போர் புரியத் தொடங்கினர்.

பல போர்கள் புரிந்து களைத்துவரும் சோழன் சேனைகளை எளிதில் வென்றுவிடலாம் என்று எண்ணிக் கொண் டிருந்தது தவறு என்பதைப் பாண்டியன் வெகு சீக்கிரத்தில் அறிந்துகொண்டான். கடுமையாகப் போர் புரிந்தானேனும் சோழனை வெல்வது அரிதென்பதை அவன் உணராமற்போகவில்லை. நாளுக்கு நாள் தன் படை வலி குன்றுவதையும் அவன் நன்குணர்ந்தான். சோழனோடு நட்புக் கொள்ளவும் அவனுக்கு மனம் வரவில்லை. ஆதலால் வீரத்தோடு படைகளுக்குப் பல விதத்திலும் மனவெழுச்சியை மிகுதிப்படுத்திக் கம்பீரமாய்ப் படைகளை நடத்திக்கொண்டு போர் முனையிற் சென்று நின்று சண்டை செய்தான். என் செய்யினும் என்னே! முடிவில் அவன் சேனை சோழன் சேனைகளை எதிர்த்து அமராட முடியாது சிதறி ஓடிற்று. அமரபுஜங்க பாண்டியன் தோல்வியுற்றான். சோழனுக்குக் கப்பங் கட்டுஞ் சிற்றரசருள் ஒருவனாக இருக்கவும் அவன் ஒப்புக் கொண்டான்.

சோழ மன்னனுன இராஜ ராஜன் தன் படைக ளுடன் சென்று நுளம்பர்களையும் போரில் வென்றுன். நுளம்ப அரசனுன அய்யப்ப நுளம்பன் சோழ அரச னுக்குச் சிற்றரசனுக இருந்து கப்பங் கட்டிவந்தான். பின் கி. பி. 1001இல் கலிங்கநாடும் இராஜ ராஜன் கைப் பட்டது. குடகு நாட்டை எதிர்த்துச் சென்றபோது அந்நாட் டரசனது தண்ட நாயகனுன பஞ்சவ மாரா யன் என்பவன் இராஜ ராஜனை எதிர்த்துப் போர் புரிந் தான். அப்போர் பானசோகே என்னும் இடத்தில் நடந்தது. பஞ்சவ மாராயன் வெகு தைரியமாய் எதிர்த் துப் போர் புரிந்தது இராஜ ராஜனுக்கு மிக்க சந்தோ ஷத்தை விளைத்தது. மற்றும் இராஜ ராஜன் அவ னுடைய வீர தீரத்தைக் கண்டு பெரிதும் மகிழ்ந்து அவனோடு போர் செய்வதை நிறுத்திவிட்டு நட்புப் பூண்டான். அவனைக் கங்க மண்டலம், வேங்கை மண்டலம் ஆகிய இரண்டிற்கும் அவன் தலைவ னுக்கி னுன்;அவனுக்குக்ஷத்திரிய சிகாமணிக் கோங்காள்வான் என்னும் பட்டமும் அளித்தான். மாலவ்வீ என்னும் ஊரும் இராஜ ராஜனுல் பஞ்சவ மாராயனுக்குக் கொடுக் கப்பட்டது. பின் இராஜ ராஜன் தன் படைகளுடன் மேலைக் கடற்கரை யோரமாகச் சென்றுன் அக்காலையில் மலையாள நாட்டிலுள்ள கொல்லமும் இராஜ ராஜனுல் எளிதிற் கைக்கொள்ளப்பட்டது. இவ்வாறு தெற்கு நோக்கி வந்த இராஜ ராஜன் ஈழ நாடாகிய இலங்கைத் தீவையும் எதிர்த்தான். இலங்கைத் தீவு மன்னனுக்

கும் சோழனுக்கும் கடும்போர் நடந்தது. எனினும் முடிவில் இலங்கையும் இராஜ ராஜனால் ஜயிக்கப்பட்டது. சேர பாண்டிய சோழ ராஜ்யங்களுக்கும் பிறவற்றிருக்கும் இராஜ ராஜனே அரசனானான்.

சேர சோழ பாண்டிய நாடுகள் மூன்றும் தென்னிந்தியாவில் விளங்கிய சிறந்த நாடுகள் என்றோம் அல்லவா? அவைகளில் சோழ நாட்டிற் குண்டாகிய வலிமையை இப்பொழுது ஆராய்ந்து பாருங்கள். சேர பாண்டிய நாடுகள் சோழ மன்னன் ஆட்சிக் குட்பட்டனவாயின. ஈழமும் சோழன் ஆட்சியிற் சேர்ந்ததாயிற்று. முடியுடை மன்னர் எனப் போற்றிக் கூறும் சிறப்பினை யுடையவர்களான சேர பாண்டியர்கள் சோழனுக்குக் கப்பங் கட்டுஞ் சிற்றரசர்க ளாயினர். ஆகவே சோழன் முத்தமிழ் நாடுகளுக்கும் தலைவனானான். ஆதலால் இராஜ ராஜ சோழனுக்கு மும்முடிச் சோழன் என்ற பெயர் உண்டாயிற்று.

சீரும் சிறப்பும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற இராஜ ராஜன் இவ்வாறு பல மன்னர்களையும் போரில் வென்று புகழ் பெற்று விளங்கினான். அவன் தான் நினைத்தபடி தன்னாட்சிக் காலத்திற் சோழ நாட்டை உன்னத நிலைக்குக் கொண்டுவந்ததை எண்ணி எண்ணி மகிழ்ந்தான்; அவன் மனம் களிப்பென்னுங் கடலில் மூழ்கித் திளைத்தது. சளுக்கிய மன்னனான விமலாதித்தன் சிறைப்பட்டுத் தஞ்சையில் இருபத்தி மூன்று வருடங்கள் இருக்கவேண்டிய தாயிற்று. ஆனால் இராஜ ராஜன் மிக்க

மரியாதை யுடனேயே அவனை வைத்திருந்தான். இராஜ ராஜன் மீண்டும் ஒருமுறை படை கொண்டு சென்று மேனாட்டுச் சளுக்கியரோடு பொருது வெற்றிகொண்டு வந்தான். இராஜ ராஜனது பராக்கிரமமும் புகழும் தமிழகத்திலும் தக்கணத்திலும் எல்லோராலும் சிறப் பித்துக் கூறப்பட்டன.

## VII. புத்துயிர் அளிக்கும் பொன் னுருவம்

இராஜ ராஜ சோழனுக்குக் குந்தவை என்று ஒரு மகள் இருந்தாள் என்று கூறினோம் அல்லவா? அவள் கட்டழகமைந்த தெய்வப் பெண் போல விளங்கினாள். கல்வி கேள்விகளிற் சிறந்த அறிவு படைத்தவள் அக்குந்தவை. தன் தந்தை படையெடுத்துச் சென்றிருந்த காலத்தெல்லாம் குந்தவை தன் சகோதரன் இராஜேந்திரனுக்குப் பெருந்துணை புரிந்து வந்தனள். அரசியலை அமைவுற நடாத்தும் ஆற்றல் அவளிடத்தில் இயற்கையிலேயே அமைந்திருந்தது. அவள் குடிகளிடத்தில் நிறைந்த அன்புடையவள். எக்காலத்திலும் எவருக்கும் உதவி புரிதலிலேயே அவள் தன் காலத்தைச் செலவழித்து வந்தாள். ஆதலால் அவள் எல்லோராலும் விரும்பப்பட்டவள் ஆனாள்.

இராஜ ராஜன் தன் மகள் குந்தவை மணப் பருவம் அடைந்திருத்தலை யறிந்தான். அவளுக்குத் திருமணம் செய்ய வேண்டும் என்னும் விருப்பம் அவனுக்குண்டாயிற்று. தன்னைப் போன்ற வீர தீரனாகிய மருமகனை அவன் அடைய விரும்பினான். சீரும் சிறப்பும் செல்வமும் வீரமும் ஒருங்கே அமைந்த மணாளனையே தேடிக் குந்தவைக்கு மணம் செய்விக்க

வேண்டும் என்னும் பெருவிருப்பம் அவன் மனத்தைக் கொள்ளைகொண்டிருந்தது. அதற்கு வேண்டிய முயற்சிகளை அவன் செய்துவந்தான். அவை குந்தவைக்குத் தெரியாமற்போகவில்லை. அவளும் கல்வி நலம் வாய்க்கப் பெற்றவனும் வீரனும் உயர் குடியிற் பிறந்தவனுமான ஒருவனையே தனக்கு மணாளனாகக் கொள்ள விரும்பினள். என்றாலும் தன் கருத்தை ஒருவரிடமும் அவள் தெரிவித்தவள் அல்லள்.

ஒரு நாள் மாலைக் காலத்தில் குந்தவை பொழுது போக்குங் காரணமாக மேன் மாடியில் உலாவிக்கொண்டிருந்தாள். அவள் அங்குத் தோன்றிய பூந்தோட்டத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். அந்தப் பூந்தோட்டம் கண்களைக் கவரும் வனப்பு வாய்ந்தது. வானுற வோங்கி வளரும் தருக்கள் பல அங்குச் செறிந்திருந்தன. பல் வகையான பழந்தரு மரங்கள் தழைத்துப் பூத்துக் காய்த்துக் கனிந்து விளங்கின. எங்கணும் மணமும் நிறமும் கொண்டு விளங்கும் மலர்தரு செடிகள் அழகுடன் விளங்கின. கம கம வென வீசும் மலர்களின் மணம் ஆரோக்கியத்தையும் இன்பத்தையும் விளைப்பதாகும். புள்ளினங்கள் கூறிய அறிவுடையன. எழில் மிகு இயற்கை அற்புதங்கள் செறிந்த இடத்தையே அவை தங்களுக்கு வாசத் தலமாகக் கொள்கின்றன அல்லவா? அறிவைப் பெருக்கி, ஆர்வத்தை விளைவித்து, அன்பை யூட்டி, ஆச்சரியத்தைத் தோற்றுவித்துக் கல்வியின் மாண்பைச் சீர்தூக்கிக் காட்டி அருளை

4

விளக்குவது இயற்கை வளமே. ஆதலால் அச்சோலை யில் புள்ளினங்கள் மகிழ்ந்து வசித்தன என்பது வியப் பன்று. மற்றும் அவைகளுக்கு அச்சோலையே ஏற்ற விடம் என்று கூறலாம். அங்கு நீர் நிலைகளும் சிறு கட்டடங்களு மிருந்தன. அச்சோலையில் உணவும் நீரும் ஓரிடத்திலே கிடைத்ததால் அவை இன்புற்று அச்ச மின்றிக் கூட்டம் கூட்டமாக வாழ்ந்துவந்தன.

அச்சோலையின் நடுவில் ஓர் அழகிய குளம் சுற்றிப் படிக்கட்டுகள் அமைக்கப் பெற்றதாய் இருந்தது. அக் குளத்தின் நடுவில் நீராழி மண்டபம் ஒன்றுண்டு. அக்குளத்தின் நீர் தெளிந்து தண்ணென்று மதுர முடையதாக இருந்தது. அல்லி, நீலம், தாமரை முத லிய நீர்ப்பூக்கள் மலர்ந்து அக்குளத்தையும் அம்மண்ட பத்தையும் அழகு படுத்தின.

அச்சோலையில் தேன் துளிகள் எங்கும் துளிக் கும். முகில்கள் மரங்களின் முடியிற் படிந்திருத்தலால் கதிரவன் கிரணத்தை என்றும் அங்குக் காணமுடியாது. தேன் துளிகளை நீர்த் துளிகள் என்று மயில்கள் எண்ணி ஆங்காங்குத் தம் தோகையை விரித்தாடும். சில அகவும். மந்திகள் தம் தலையிற் பலாப் பழங் கொண்டு இருபெரு மரங்களின் இடையே படர்ந்துள்ள கொடிகளின் வழியே குதித்தோடும் காட்சி மிக்க அற்புதமானது. அவை கொடிக் கயிற்றின் வழியே நடக்கும் காட்சி கழைக்கூத்தன் செயலை நினைப்பூட்டுவதும் ஆகும். மான்கள் களித்துத் துள்ளிக் குதித்து ஆங்காங்குக்

கூட்டங் கூட்டமாக விளையாடிக்கொண் டிருக்கும். எங்கும் புள்ளொலி பரந்து கேட்கும்.

அத்தகைய சிறப்பு வாய்ந்த சோலை நான்கு புறங் களிலும் எழுந்து உயர்ந்து விண் முட்டும் வியன் பெருஞ் சுவர்களால் வளைக்கப்பட்டிருந்தது. இரண்டு பெரு வழிகளைத் தவிர வேறு வழிகள் அச்சோலைக்கு இல்லை. ஒரு வழி பற்றிச் சென்றால் மதிற் சுவர்களாற் சூழப்பட்ட சிறிது தூரத்திலுள்ள ஒரு பெரிய கட்ட டத்திற்குப் போய்ச் சேரலாம். மற்றொரு வழி பற்றிச் சென்றால் அரண்மனையை யடையலாம். இருபெரு வழியின் கதவுகளும் இரும்பினால் ஆக்கப்பட்டவை. அரண்மனையின் மேல் மாடியிலிருந்தும், மதில் சூழ்ந்த கட்டடத்தின் மேன்மாடியிலிருந்தும் சோலையில் இருப் பவைகளையும் அங்கு நடப்பவைகளையும் தெரிந்து கொள்ளலாம். சோலைக்குள்ளிருந்து பார்த்தால் அரண் மனை மேன்மாடியின் ஒரு புறம் மட்டும் தெரியும். மற்ற தோர் கட்டடம் தெரியவே தெரியாது. தோட்டத்தின் மதிற் சுவர்களின் மேலும் மற்றதோர் கட்டடத்தின் மதிற் சுவர்களின் மேலும் உருக்குத் துண்டுகளும் கண்ணாடிகளும் பதிக்கப்பட் டிருந்தன.

மேலே சொல்லப்பட்ட சோலையின் ஒரு பக்கத் தில் ஒரு தட்டப் பாறை யிருந்தது. அப்பாறையின் மேல் தோற்றத்தில் ஆண் சிங்கத்தை யொத்த ஓர் இளைஞன் அமர்ந்திருந்தான். அவன் உருவப் பொலி வைக் கண்டு மாரனும் தான் உருவோடிருத்தல் அடா

தென்று அழிந்தொழிந்தனரோ என்று கருதும்படி அவன் விளங்கினான். ஆழ்ந்த நீர் நிலையின் தோற்றம் போல அவன் கண்கள் விளங்கின. அவன் வதனம் பெருஞ் சிந்தனையில் அவனிருந்தான் என்பதை விளக்கிற்று. வடிவ வழகுடையவனாயினும் பெருந் துன்பத்திற்குட்பட்ட நிலையைச் சில குறிகளால் பிறர் உணருமாறு அவன் தோன்றினான். அவன் நீண்ட கைகளும், அகன்ற மார்பும், பரந்த நெற்றியும், நுணுகிய பார்வையும் அவனைப் பெருங் குடி வழிவந்த சிறப்புடைச் செம்மல் என்று விளக்கிக் காட்டின.

அவ்வாலிபன் சுமார் இருபத்தெட்டுக்கு மேல் முப்பத் திரண்டுக்குட் பட்ட வயதுடையவன். அவன் பாறையின்மீது அமர்ந்துகொண்டு ஏதோ சிந்தித்துக்கொண்டிருந்தான். அவன் பூமியையே நோக்கிக் கொண்டிருந்தான். அவன் பார்வை பூமியைத் துளைத்து விடுமோ என்னும்படி காணப்பட்டது. அவன் சிறிது நேரம் மேடையின்மீது அமர்ந் திருப்பான்; பின் எழுவான்; சிறிதாறு சென்று உலவுவான்; மீண்டு அப்பாறையின்மீது வந்து அமர்வான்; நெட்டுயிர்ப்பு விடுவான்: இவ்வாறே அரைமணி நேரத்திற்கு மேல் அவன் அச்சோலையிற் கற்பாறையின்மீது அமர்ந்திருந்தான். அவன் ஆழ்ந்த சிந்தனையில் துன்புற்ற நிலையில் அமர்ந்திருந்தவ னாயினும் அவன் மனத்தில் சிறிதும் அச்ச மில்லாம லிருந்தான். அவனிடத்தில் தீனத்துவம் காணப்படவே யில்லை. நிர்ப்பயமான நிலை

யோடு சுயேச்சையாகக் காட்டில் தன் மனம்போன போக்காகச் சுற்றித் திரிந்து கர்ஜித்து மிருக வர்க்கங் களின் இருதயத்தைக் கலக்கும் ஆண் சிங்கத்தை ஒரு கூட்டில் அடைத்து வைத்திருந்தால் அது எத்தகைய துன்ப மடையுமோ அத்தகைய துன்பம் அவ்விளங் குமரனைச் சூழ்ந்திருந்தது. எனினும் அவன் ஒரு சிறிதும் அஞ்சின னல்லன்.

வசந்த காலத்தைச் சேர்ந்த அந்தத் தினத்தில் எல்லா மிருகங்களும் மன மகிழ்ச்சியோடு விளையாடிக் கொண்டிருந்தன. செடி, கொடி, மரம் முதலியன புஷ்பங்களுடனும் தளிர்களுடனும் நிறைந்து செழித்து நிறங்கள் பல தோன்ற விளங்கின. குயில்கள் பளபள வென்னுந் தேக காந்தியுடன் தளிர்களை உண்ணும் பொருட்டு வந்து, இன்பமான குரலுடன் விளையாடிக் காதுகளுக்கு இன்பம் விளைவித்தன. குடபால் செக்கர் ஞாயிறு தோன்றியது. புஷ்பங்களின் நிறைந்த மணத் தைக் கவர்ந்துகொண்டு, பாரத்தால் வேகமாய்ச் செல்வ தற்கு இயலாது பையவே மாந்தமாருதம் வீசியது. ஆனால் இக்கால நலங்கள் ஒன்றும் அவனுக்கு இன்பத்தை யுண் டாக்க வில்லை. அவ்விளங்குமாரன் ஒரு முகூர்த்த காலம் கீழ்நோக்கிய பார்வையாய் ஒரே கருத்தோடு அமர்ந் திருந்து ஆழ்ந்த சிந்தனையின் பயனாக ஒருவித முடி விற்கு வந்தவன்போல் காணப்பட்டான். அப்பொழுது அவனுக்குப் பெருமூச் சுண்டாயிற்று. அவன் மேனி உயர்ந்தது. அவன பார்வை பூமியை விட்டு அகன்றது.

அவன் மனம் சிறிது சமாதானத்தை யடைந்தது. அதனால் அவன் எழுந்து நின்றான். முகத்தை மேல் நோக்கி நான்கு புறங்களிலும் சுற்றிப் பார்த்தான். எப்பக்கம் நோக்கினும் அப்பக்கம் சுவரே காணப்பட்டது. அச்சுவர்களின் மீதோ கண்ணாடித் துண்டுகளும் இருப்புத் துண்டுகளும் பதிக்கப்பட் டிருந்தன. ஒருவன் தன் வாணாள் முழுவதும் பிரயாசைப் பட்டாலும் அச்சுவர்களைத் தகர்த்துவிட்டு வெளிவருதல் அசாத்திய மான தாகும். சுவரின் மீதேறிக் குதிப்பதற்கும் வழி யில்லை. ஒன்றும் செய்வதற்குத் தோன்றாத நிலையில் நிற்கும் அவன் அரண்மனையின் மேன் மாடியில் நிற்கும் உருவிற் றிருவினை ஒப்பாள் ஒருத்தியைக் கண்ணுற்றான். அவள் அழகிற்கு உரு எனலாம்படி விளங்கினாள். மானிலம் போற்றும் பேரெழில் வாய்ந்த அந் நங்கை உபவனத்தில் அமர்ந்திருந்த அவ்விளங் குமரனையே நெடு நேரமாக நோக்கிக்கொண்டிருந்தாள். ஆதலால் எழுந்து மேனோக்கிப் பார்த்த அவ்விளங் குமரன் அவளது வதனாம்புஜத்தை மலரச் செய்தான். அப்பெண்மணியும், வீரமும் பொலிவும் விளங்கிடும் குமரன் முகத்தை நோக்கினள். அப்பெண்மணியின் பார்வையாகிய் கருணாரஸத்தில் இவ்விளமை யுடையோன் மூழ்கித் திளைத்தான். அவன் மனத்தைத் துன்புறுத்திய கொடிய சிந்தனைகள் யாவும் மறைந்து ஒழிந்தன. இருவரும் ஒருவரை ஒருவர் சிறிது நேரம் பார்த்த வண்ணமாகவே இருந்தனர். அவள் அவ்

னுக்குப் புத்துயி ரளிக்கும் போன் னுருவமாகத் தோன்றினள்.

அவ்விளங்குமாரன் அவ்வெழில் பெறு வனிதை யைக் கண்டதுமே அவன் மனத்தில் அவள் வதனம் பிரதிபிம்பித்தது. அவளுடைய பிரதிபிம்பாகாரம் எக்காரணத்தினுலும் அவன் மனத்தினின்றும் வேறு பட்டு விடக் கூடியதன்று. அவன் முகமாகிய அரங் கத்தினிடத்தில் அவன் மனத்தில் தோன்றிய எண்ணங் கள் ஒவ்வொன்றும் முற்றத் தோன்றி விளங்கக் காட்டி மறைந்து வந்தன. ஆனல் பழைமையான விரோதம் ஒன்றும் அவனிடத்தில் இருந்ததாகக் காணப்பட வில்லை. தன்னை இந்நிலைக்குக் கொண்டுவந்தவனுடைய உயிர்க்கு உயிர் போன்றவள் அவ்வனிதை என்று அவ னுக்குத் தெரியவில்லை. அவன் அப்பெண்ணின் கரத் தைப் பற்றியவனே தேவேந்திரன் எனச் சொல்லத் தகுந்தவன் எனறு நினைத்தான். அந்தப் பாக்கியத்திற் குத் தானே தகுந்தவன் என்றும் அவன் கருதினன். அச் சமயத்தில் ஒரு பெரிய மணியோசை அவன் காதில் விழுந்தது. அவ்வோசை அவனைத் திடுக்கிடும்படி செய்தது. உடனே அவன் அச்சோலையை விட்டு அகன்று பெரிய கட்டடம் ஒன்றிற்குச் செல்லும் வாயில் வழியாகச் சென்றான். அப்பெண்மணியும் அதுவரை அவனையே பார்த்துக்கொண் டிருந்தாள். அவன் சோலையைவிட் டகன்றதும் அவள் ஒரு நெட் டுயிர்ப்பு விட்டு அவ்விடத்தைவிட் டகன்றாள்.

சோலையைவிட் டகன்ற இளங் குமரன் ஒரு பெரிய கட்டடத்திற்கு சென்றான். உடனே அக் கட்டடத்தின் வாயில்கள் இருப்புக் கதவங்களால் தாழி டப்பட்டன. அவைகள் மதயானைகள் மோதினும் திறக் கப்படும் திறத்தன வன்று. அக்கட்டடம் ஒரு பெரு வெளியில் அமைந்துள்ள தாகும்.

உயர்ந்த மதில்களாற் சூழப்பட்டக் அகட்டடத்தின் உட்புறம் மிக அழகாக இருந்தது. அங்குச் சலவைக் கற்களாலும் படிகக்கற்களாலும் கட்டப்பட்ட மேடை களும் விதானங்களும் கண்களைக் கவர்வன வாகும். அவைகளைச் சுற்றிலும் பலவகை மரங்களும் செறிந் திருந்ததால் புள்ளினங்களுக்கு அவ்விடம் நிலையமாயிற்று. அங்கே ஒரு புறத்தில் சந்திரகாந்தக் கற்களாற் கட்டப் பட்ட திண்ணை வரிசைகளோடு கூடிய தாமரைக் குளம் ஒன்று கண்களுக்கு விருந்தெனத் திகழ்ந்தது. எப்பேர்ப் பட்டவர்களையும் வசீகரித்து ஐம் புலன்களையும் இழுக் கும்படி செய்து தம் வயமாக்கும் பொருள்கள் அவ்வி டத்தில் நிறைந்திருந்தன.

அந்தத் தலத்தில் வசிப்போர்களுக்கு அதுவே முழு உலகம் போன்றதா யிருந்ததால் அவர்களுக்கு வெளிப்புறத்தவர்களோடு சம்பந்தமற் றிருந்தது. அங்கு வசித்தவர்களைக் கிணற்றுத் தவளைகள் என்றே கூறலாம். அதனாற் குற்றம் ஏற்படமாட்டாது. தினந் தோறும் அங்கிருந்தவர்கள் அரண்மனை வேலைக்காரர் களில் சிலரையே காணத் தக்கவர்களா யிருந்தனர்.

ஆயினும், அவர்கள் அருகாமையி லிருந் மாடகூடங் களில் வசிக்கும் தம்மைக் காண்பவர்களைத் தாமும் காணத் தகும் நிலையில் இருந்தனர். சோழ வரசர்கள் போரில் தமக்கு அஞ்சிப் புறங்காட்டி ஓடியவர்களைப் பற்றிக்கொண்டு வந்து சிறைப்படுத்துபவர்களையும், தமக்குக் கீழ்ப்படியாக் குறுநில மன்னர்களையும் கௌரவமாகப் பார்த்துக்கொண்டு, மிகவும் துன்புறுத்தாமல் இராஜ புருஷர்களுக்கு இன்றியமையா வெல்லாச் சௌகரியங் களையுங் கொடுத்து அவர்களைச் சிறைச்சாலையில் வைப்பதற்கு அப்பிரதேசம் பிரயோசனப் படத்தக்கதாயிருந்தது. செருக்குற்ற மன்னர்களை எப்பொழுதும் தம் நோக்குக் கெதிரில் வைத்துக்கொண் டிருப்பதற்கே சோழ வரசர்கள் அத்தலத்தை யுண்டாக்கினார்கள்.

கி. பி. 972 முதல் 989 வரை அரச னில்லாது வேங்கை நாடு பெருந் துன்பப் பட்டுக்கொண் டிருந்த நிலையில் இராஜேந்திரன் தன் தந்தையின் கட்டளைப்படி ஒரு பெருஞ் சேனையுடன் சென்று அந்த நாட்டைக் கைப்பற்றிச் சளுக்கிய வம்சத்தவனான விமலாதித்தனை யுஞ் சிறைப் பிடித்துக்கொண்டு வந்தான் என்று முன் கூறினோ மல்லவா? ஆண்டில் மிக்க இளையனா யிருந்து சிறையாக வைக்கப்பட் டிருந்தமையால் மேலே கூறப் பட்ட இடத்தில் பலவித சௌகரியங்களுடன் அவன் இருந்துவந்தான். அவனுக்குப் பலவிதத்திலும வசதி கள் செய்து கொடுக்கப்பட் டிருந்தபோதிலும் அவை களால் அவனுக்குத் துன்ப முண்டாயினவே யன்றி

நலங்கள் உண்டாக வில்லை. ஆண்டுகள் செல்லச் செல்ல அவன் மனம் மிக்க துன்பத்தை யடைந்தது. எவ்வகையிலேனும் தன் சிறை வாசத்தை நீக்கிக் கொள்ள வேண்டு மென்று அவன் நினைத்தான். அவன் அவ்வாறு விடுதலை பெற வழி எது என்று சிந்தித் தறிவதற்கே தனித்ததோர் இடத்தை நாடி யடைந்தான். அவன் சிந்தனையில் ஆழ்ந்து பல நாள் முயன்று வழிதேடியும் ஒன்றும் தோன்றுமற் பெருந் துன்பத்துடன் அங்கு இருந்துவந்தான். எழில் பெறு வனிதையை அரண்மனை மாடியிற் கண்டது முதல் அவன் தன் சிறைவாசத்தையும் மறந்து அப்பெண்மணியின் கரத்தைப் பற்றுவதிலேயே கருத்துடையவனு யிருந்தான்.

## VIII. தந்தையும் மகளும்

மகளுக்கு மணஞ் செய்து காணவேண்டும் என்று விழைந்த இராஜ ராஜன் அவளுக்குத் தகுந்த கணவன் யாவன் எனத் தேடிக்கொண்டிருந்தான். ஒரு நாள் மாலைப்பொழுதில் குந்தவையும் தானுமாகப் பேசிக்கொண்டிருந்த பொழுது இராஜ ராஜன் அவளுடைய கருத்தையும் அறிந்துகொள்ள விரும்பினான். அப்பொழுது அவர்கள் கீழ் வருமாறு பேசிக்கொண்டனர்:—

இராஜ ராஜன்:—அருமைப் புதல்வியே, உனக்கு மணம் செய்து காணவேண்டு மென்று நான் விரும்புகிறேன். நம் நிலைக்குத் தக்க மணாளன் ஒருவன் உனக்கு வாய்க்க வேண்டுமே என்று கவலை யுற்றவனாய்த் தேடித் திரிகின்றேன். நீயோ கல்வி கேள்விகளில் மிக்கவளாயும், எழில் பெற்று விளங்குபவளாயும், என் மகளாயும் இருக்கிறபடியால் கல்வி கேள்விகளில் மிக்கவனும் அழகு வாய்ந்தவனும் வீர தீர சூரனுமான ஒருவனையே மணக்கத் தகுந்தவள். ஆதலின் எவ்வாறாயினும் நான் நாடி யறிந்து நன் மணாளன் ஒருவனுக்கு உன்னை மணம் செய்து கொடுக்க முயலுகின்றேன். இறைவன் திருவருளால் அது கைகூடும் என்றே நினைக்கின்றேன்.

குந்தவை:—என் அருமைத் தந்தையே, உம் வார்த்தையைக் கடந்து நடப்பேனே நான்? ஆனல் நான் தங்களைக் கேட்டு ஒரு விஷயம் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நெடு நாட்களாக விருப்பங்கொண்டிருக்கிறேன். ஆனல் அவ்வாறு கேட்டறிய எனக்கு இதுவரை சமயம் வாய்க்க வில்லை. இன்று வாய்த்தது எனது அதிர்ஷ்டமே யாகும். தாங்கள் என் மீது கோபங் கொள்ளாமலிருப்பீ ராயின் நான் அதனைக் கேட்டறிய விரும்புகிறேன்.

இராஜ ராஜன்:—குந்தவை, நீ விரும்பியவற்றைக் கேள். எனக்கு ஒரு காலத்தும் உன் மீது கோபம் ஏற்படாது. நீ அறிய விரும்பியதைக் கூறுக.

குந்தவை:—தந்தையே! அதோ தோன்றும் அப் பெரிய மதில்களாற் சூழப்பட்ட பிரதேசத்திலுள்ள கட்டடங்களிற் யார் வசிக்கிறார்கள் ?

இராஜ ராஜன்:—அங்கு நமக்குக் கீழ்ப்படியாக் குறுநில மன்னர்களும், போரில் நம்முடன் பொருது தோற்றுப்போய்ச் சிறையாகப் பிடிக்கப்பட்டவர்களும் வசிக்கிறார்கள்.

குந்தவை:—ஏன் அவர்கள் அங்கு வசிக்க வேண்டும்? அவர்கள் திருடர்களா? அல்லது குற்றவாளிகளா?

இராஜ ராஜன்:—அவர்கள் திருடர்கள் அல்லர். குற்றவாளிகளுக்கு ஒப்பானவர்கள். நமக்குக் கப்பங் கட்டுங் கடமை யுடையவர்கள். அதனைக் கட்ட மறுப்பார்களாயின் அவர்கள் குற்றவாளிகள் அல்லவா ?

குந்தவை:—அவர்களை எப்பொழுது விடுவீர்கள் ?

இராஜ ராஜன்:—அவர்கள் தங்கள் குற்றத்தை யுணர்ந்து என்னை மன்னிப்புக் கேட்டுக்கொண்டு எனக்குக் கீழ்ப்படிவார்களானால் விடப்படுவார்கள். இல்லையேல் அங்கேதான் இருக்கவேண்டும்.

குந்தவை:— அவர்களைத் துன்புறுத்துவதும் உண்டோ ?

இராஜ ராஜன்:—அவர்களைத் துன்புறுத்துவதில்லை. அவர்கள் அரசர்களும் நல்ல குடிகளிற் பிறந்தவர்களும் ஆவர். அதனால் அவர்களுக்குப் பல விதத்திலும் சௌகரியங்கள் செய்து வைக்கப்பட்டுள்ளன.

குந்தவை:—அங்கு இருப்பவர்களில் ஆண் சிங்கத்தை ஒத்த இளையவர் ஒருவர் இருக்கிறாரே, அவர் செய்த குற்றம் யாது ?

இராஜ ராஜன்:—ஆம், ஆம். அவர் ஒரு குற்றமும் செய்ய வில்லை. அவர் வட நாட்டவர் ; விமலாதித்தர் என்னும் பெயருடையவர். அவர் கீழைச் சளுக்கிய வம்சத்தினர். அவர் வேங்கை நாட்டரசர். அவர் முன்னோர்கள் கலியாணபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டு வந்தனர். உன் அண்ணன் இராஜேந்திரன் படையெடுத்துச் சென்றபோது அவரைச் சிறையாகப் பிடித்துவந்தான். அந்நாள் முதல் அவர் அங்கே இருக்கிறார்.

குந்தவை:—எத்துணைக் காலமாக இருக்கிறார் ? பாவம் ! அவரைப் பார்த்தால் இளையவராக இருக்-

கிறுரே. அவர் குழந்தையாய் இருந்தபோதே இங்கு வந்துவிட்டாரோ ?

இராஜ ராஜன்:—அவர் இளம் பருவத்தவரே.

குந்தவை:—அவரை ஏன் இன்னும் சிறைப்படுத்தி வைத்திருக்க வேண்டும் ?

இராஜ ராஜன்:—அதைப்பற்றி யோசிப்போம்.... உம்....உம்...

குந்தவை:—அதைப்பற்றி என்ன யோசிக்க வேண்டும் ?

இராஜ ராஜன்:—அதனுல் உனக்காவ தென்ன ?

குந்தவை:—அதனுல் எனக்காவ தென்னவென்று கேட்கிறீர்கள். அவர்தாம் என் ஆவியைக் கொள்ளை கொண்டார்.

இராஜ ராஜன்:—எனக் கொன்றும் விளங்கவில்லையே....என்ன அது....விவரமாகச் சொல்......சொல்.

குந்தவை:—சொல்வ தென்ன! அவரைச் சிறை விடுவிப்பது என்கடன் ஆயிற்று. இல்லையேல் எனக்கும் சிறைவாசம் ஏற்படும் என்பது திண்ணம்... வேறென்ன இருக்கிறது ?

இராஜ ராஜன்:—நீ சொல்வது எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே கண்மணி! எனக்குத் தெளிவாகச் சொல்.

குந்தவை:—தெளிவாக என்ன சொல்வது ! என்னைப்பற்றிய கவலை ஏதோ ஒன்றிருக்கிற தென்றீர்களே அது என்ன ?

இராஜ ராஜன்:—அது உன் மணத்தைப்பற்றி யதுதான்.

குந்தவை:—அதற்காக என்ன செய்தீர்கள் ?

இராஜ ராஜன்:—நமது குலத்திற்குத் தகுந்த ராஜ குமாரன் ஒருவனைத் தேடி உனக்கு மணம் செய்து வைக்கப் பாடுபடுகிறேன்.

குந்தவை:—ஏன் அத்துணைப் பாடுபட வேண்டும்? எங்கேயாவது வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய் வேண்டுமென்று வருந்துவார்களுண்டோ ?

இராஜ ராஜன்:—நீ சொல்வது எனக்கு விளங்க வில்லையே?

குந்தவை:—எவ்வாறு விளங்கும்? நானும் சிறை வாசம் செய்யும்போது எல்லாம் தானே விளங்கு கிறது.

இராஜ ராஜன்:—என்ன ஏதேதோ சொல்கிறாய்? உனக்குச் சிறை வாசமா ? அஃதென்ன? எனக்கு விளங்கும்படி சொல்.

குந்தவை:—புருஷனைச் சிறையில் வைத்து விட்டு வெளியில் உல்லாசமாகக் காலங் கழிக்கக் கற்புடைப் பெண்டிர் விரும்புவார்களோ ? அல்லது அது அவர் களுக்கு அறம் ஆகுமோ ?

இராஜ ராஜன்:—என்ன !...என்ன !... விமலா தித்தனை...நீ...நேசிக்கின்றாயோ ?

குந்தவை:—என் கணவராக நான் அவரை என் மனத்தில் வரித்துவிட்டேன்.

இராஜ ராஜன்:—எதையும் ஆய்ந்தோய்ந்து பார்த்தல்லவோ செய்யவேண்டும். அவசரப் படாதே. சிறை பிடிக்கப்பட்டவனையா என் அருமை மகள் மணப்பது?

குந்தவை:—அவர் எவ்வகையிலும் குற்றவாளியல்லவே.

இராஜ ராஜன்:—சிறைப்பட்டவனுக்குத் தன் மகளைக் கொடுத்தான் என்று என்னை உலகம் தூற்றுமே.

குந்தவை:—உலகத்தார்க்கு அவரைப்பற்றி என்ன தெரியும்? அவர்கள் அவ்வாறு கூறுவார்களானால் அவர்கள் கூறுவது தவறு என்பதை நாம் விளக்கிக் காட்ட வேண்டும். மற்றும் அவர் உமக்கு முன்பு சிற்றரசரு மல்லர், பகைவரு மல்லரே.

இராஜ ராஜன்:—குந்தவை! வேறெவரையேனும் மணந்துகொள்ளக் கூடாதோ? என் பொருட்டேனும் அவ்வாறு செய்துகொள்ள லாகாதா?

குந்தவை:—நும்பொருட்டு நான் குற்றந் தங்கும் காரியத்தைச் செய்யலாமா? அவ்வாறு செய்தல் பாவ மல்லவா? நான் ஒருவரைத்தானே வரிக்கலாம். முதல் முதல் யாரை என் மனத்தில் வரித்துக்கொள்கின்றேனோ அவர் தாமே எனக்கு என் உயிருள்ளளவும் தலைவ ராவார். அவ்வாறிருக்க நான் எவ்வாறு மாறி நடக்க முடியும்? என் அருமைத் தந்தையே! அவரை விடுவித்து என்னை அவருக்கு மணம் செய்து கொடுக்கும்படி வேண்டுகிறேன்.

இராஜ ராஜன் குந்தவை கூறியவைகளைக் கேட்டு இன்னது செய்வதெனத் தோன்றுதவனானான். அவள் ஒரே மனதாய் விமலாதித்தனையே மணப்பதெனத் தீர்மானித்து விட்டதையும் நன்குணர்ந்துகொண்டான். பின் இருவரும் எழுந்து சென்றனர். அவன் அன்றிரவு தன் மனைவிமார்கள் ஐவரிடமும் குந்தவையின் கருத்தைக் கூறி அவர்கள் அபிப்பிராயத்தையும் கேட்டான். அவர்கள் அவள் கூறியபடி செய்தலே ஏற்புடைத்தாகுமென்று கூறக் கேட்டு மன்னன் தன் மகள் குந்தவையை விமலாதித்தனுக்கு மணஞ் செய்து கொடுக்க எண்ணங் கொண்டான். குந்தவை தான் உள்ளத்திற் கொண்ட இளைஞனை மணந்துகொள்ள வேண்டுமென்று இறைவனை உள்ளன்போடு இறைஞ்சி வந்தாள்.

# IX. குந்தவை திருமணம்

சிறையில் வசிக்கும் விமலாதித்தன் குந்தவையைக் கண்ட நாள் முதல் அவளை மணந்துகொள்வ தெப்படி என்றே ஆலோசித்துவந்தான். தான் சிறையில் வசிப்பதை அவன் முற்றிலும் மறந்தவனாய்த் தன் சிறை மீட்சியைப்பற்றிச் சிந்தனையின்றி யிருந்தான். சில தினங்களுக் கப்பால் ஒருநாள் காலை நேரத்தில் இரண்டு குதிரைச் சேவகர்கள் அக்கட்டடத்திற்கு வந்தார்கள். அவர்கள் வந்ததும் குதிரையை விட்டிறங்கி நேராக விமலாதித்தனிடம் சென்றார்கள். விமலாதித்தன் வழக்கம்போல் பளிக்குப் பாறைமேல் உட்கார்ந்துகொண்டிருந்தான். ஆனால் அவன் ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்திருந்தான். வந்த குதிரை வீரர்கள் அவனை வணங்கி அவனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தார்கள். அதனை அவன் வாங்கி வாசித்துப் பார்த்தான். அப்பொழுது அவன் முகம் தெளிவடைந்தது; முகத்திற் புன்முறுவல் தோன்றியது. ஒரு முறை அரண்மனை மாடியை நோக்கினான். பின் எழுந்து தன்னறையுட் புகுந்து ஆடைகளை அணிந்துகொண்டு வெளியே வந்தான். அதற்குள் அங்கு ஒரு குதிரை கொண்டுவரப்பட்டது. மூவரும் குதிரைகள்மீது

ஏறிக்கொண்டனர். குதிரைகள் அரண்மனையை நோக்கிக் கடுகிச் சென்றன. விரைவில் அவர்கள் அரண்மனை வாயிலை யடைந்தார்கள். விமலாதித்தன் குதிரையை விட்டிறங்கினன். உடனே அவனுடன் வந்தவர்கள் தாமும் குதிரைகளை விட்டிறங்கி அவனை யழைத்துக்கொண்டு அரசனிடம் சென்றனர்.

விமலாதித்தன் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த இராஜ ராஜன் அவன் வந்ததும் அன்புடன் வரவேற்றுத் தக்க ஆதன மளித்து உபசரித்தான். பின் இருவரும் பேசத் தொடங்கினர். இராஜ ராஜன் விமலாதித்தனைப் புகழ்ந்து கொண்டாடினன். ஆனல் அவன் தன் மகள் குந்தவையை மணம் செய்து கொடுப்பதாகமட்டும் கூறவில்லை. விமலாதித்தனுடைய சிறைவாசம் நீங்கிற்றென்றும் அவன் நாட்டை அவனுக்கே கொடுத்துவிடப் போகிறது நிச்சயம் என்றும் அவன் கூறினன். இராஜ ராஜன் கூறியவைகளைக் கேட்டு விமலாதித்தன் மகிழ்ந்தான். இராஜ ராஜன் அவனைச் சில காலம் தன் அரண்மனையிலேயே தங்கியிருக்கும்படி வேண்டிக்கொண்டான். விமலாதித்தனும் ஒப்புக்கொண்டான். அன்று முதல் விமலாதித்தன் இராஜ ராஜனது விருந்தினனாக அவ்வரண்மனையி லிருந்து வந்தான்.

சில தினங்கள் சென்றன. விமலாதித்தன் தந்தையின் விருந்தினனாக அரண்மனையி லிருக்கிறான் என்பதைக் குந்தவை அறிந்தாள். அவள் அடைந்த சந்

தோஷத்திற்கு அளவே யில்லை. அவள் அவனைக் கண்டு தன் கருத்தை வெளியிடவேண்டு மென்று விரும்பினாள். ஒரு நாள் தோழியிடம் கடிதம் ஒன்று வரைந்து அவனிடம் அளிக்குமாறு அனுப்பினாள். அவ்வாறே அத்தோழி கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தாள். அதில் அன்றுமாலை தன்னைத் தோட்டத்தில் காணுமாறு குந்தவை எழுதியிருந்தாள். அதனை வாசித்ததும் விமலாதித்தன் பெரிதும் மகிழ்ந்தான்.

அன்று மாலைப்பொழுது எப்பொழுது வருமோ என்று விமலாதித்தன் பார்த்துக்கொண்டிருந்தான். ஒவ்வொரு மணியும் ஒவ்வொரு வருஷமாக அவனுக்குத் தோன்றியது. மாலைப்பொதும் நெருங்கிற்று. விமலாதித்தன் நல்லாடை உடுத்திக்கொண்டு தோட்டத்திற்குச் சென்றான். அங்குக் குந்தவை முன்னமேயே வந்திருந்தாள். இருவரும் சந்தித்தனர். விமலாதித்தனைக் கண்டதும் குந்தவை நாணமடைந்து தலை குனிந்து பேசாது நின்றாள். விமலாதித்தன் ஒருவாறு மனந்துணிந்து முதலில் பேசத்தொடங்கினான். அவனுக்கு அவளுடைய முயற்சியால்தான் சிறைவாசம் நீங்கப் பெற்றது என்பது தெரியாது.

விமலாதித்தன்:—இன்று காலை கடிதம் எழுதியனுப்பியது அவ்விடத்திலிருந்துதானோ ?

குந்தவை:—(நாணத்துடன் மெல்லிய குரலோடு) ஆம், அடியாள்தான் எழுதியனுப்பியது. அக்கடிதத்

தைப் பொருட்படுத்தி வந்ததற்கு நான் மகிழ்வதோடு என் வந்தனத்தைச் செலுத்துகிறேன்

விமலாதித்தன்:—நல்லது. என்னை இங்கு வரும்படி எழுதிய காரண மென்னவோ? அதனை யறிய விரும்புகிறேன்.

அவ்வாறு கூறக்கேட்ட குந்தவை தான் ஒருநாள் மாடியின்மீது இருந்துகொண்டு அவனைப் பார்த்ததையும், அன்று அவனைத் தன் மணாளனாக வரித்துக் கொண்டதையும், பின் ஒருநாள் தன் தந்தை தன் மணத்தைப்பற்றிப் பேச வந்ததையும், அப்போது தனக்கும் அவருக்கும் நடந்த சம்பாஷணையையும் கூறினாள். பின் இருவரும் ஒருவரோடொருவர் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு அரண்மனையை யடைந்தனர்; பொழுதும் பட்டது. முழுமதியும் விண்ணில் தோன்றியது. எங்கும் நிலாவின் ஒளி நீற்றொளிபோற் பரந்து வீசியது.

இராஜ ராஜன் ஒருநாள் அரசவையில் அமைச்சர்களுடன் அமர்ந்திருக்கையில் தன்மகள் குந்தவையின் மணவினையைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தான். அமைச்சர்கள் பலரும் பற்பல தேய மன்னர்களின் பெயர்களையும் அவர்கள் சிறப்புக்களையும் கூறிக்கொண்டே வந்தனர். அவைகளை யெல்லாம் இராஜ ராஜன் கேட்டுக்கொண்டிருந்தான் என்றாலும் அவன் அவர்கள் கூறியவற்றைக் கேட்க விரும்பவில்லை என்று தன் முகக் குறியால் விளக்கினான். அமைச்சர்கள்

தாம் கூறவேண்டுவனவற்றைக் கூறி முடித்த பின்னர் இராஜ ராஜன் தான் கருதியதைக் கூறத்தொடங்கினான். அமைச்சர்கள் அமைதியுடனும் ஆர்வத்துடனும் அரசன் கூறுவனவற்றைக் கேட்கத் தொடங்கினர்.

இராஜ ராஜன், "அமைச்சர்களே! நான் என் மனத்தில் நினைத்துள்ளதை இப்பொழுது உங்களுக்குத் தெரிவிக்கின்றேன். என் மகள் குந்தவை இப்பொழுது மணப்பருவம் அடைந்திருக்கிறாள். அவளுக்குத் தக்க வரனைத் தேடி மணம்செய்துவைக்க வேண்டுமென்னும் அவா என் மனத்தில் உண்டாகிவிட்டது. நான் அது விஷயமாய் அவளைக் கேட்டேன். அவள் மணாளனைத் தேர்ந்து வைத்துக்கொண்டிருப்பதாக என்னிடம் கூறினாள். அன்னான் யாரெனில் நம் இளவரசன் இராஜேந்திரன் சிறையாகப் பிடித்துவந்த விமலாதித்தனே யாவன். நான் பலவாறு எடுத்து மொழிந்து அவனை வரிக்கக்கூடாதென்று குந்தவைக்குச் சொன்னேன். அவ்வாறு சொல்லியும் அவள் ஒரே பிடிவாதமாய் அவனையே கணவனாகக் கொண்டாள். அதற்குமேல் எனக்கும் அவள் மனத்தைப் புண்படுத்த மனமில்லை. அவள் பல தக்க நிரூபணங்களுடன் விமலாத்தித்தன் தனக்குரிய கணவனே என்று கூறி என்னைக் களிப்பித்தாள். ஆதலால் அவள் மனப் போக்கின்படியே அவளை விமலாதித்தனுக்கு மணம்செய்து கொடுப்பதெனத் தீர்மானித்துவிட்டேன். என் மனைவிமார்

களும் அவ்வாறே செய்தல் தகுதி யென்று கூறினர். ஆதலால் நான் முதலில் சில நாளைக்கு முன்பு விமலா தித்தனைச் சிறையினின்றும் விடுவித்தேன். இப்பொழுது அவன் என்னுடைய விருந்தினனாக அரண்மனையில் இருந்துவருகிறான். இவ்விஷயத்தில் உங்கள் அபிப்பிராயம் என்ன?'' என்று கேட்டான்.

அமைச்சர்கள் அனைவரும் சிறிது நேரம் ஆலோசித்துவிட்டு அரசன் கூறியபடி செய்தலே அமைவுடையது என்றனர். பின்னர் அரசன் மணவினைக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி சொன்னான். உடனே சோதிடர்களை அழைப்பித்து அமைச்சர்கள் திருமணநாள் கணித்தனர். நாளும் நிச்சயிக்கப்பட்டது. திருமணத்திற்கு வேண்டியவைகளெல்லாம் சேகரிக்கப்பட்டன. பல தேய மன்னர்களுக்கும் நிருபங்கள் தீட்டி அனுப்பிக்கப்பட்டன. சோழ நாடெங்கும் குந்தவையின் திருமணச் செய்தி பரவிற்று. அரண்மனையில் மணவினைக்கு வேண்டியவைகளை யெல்லாம் சேகரிக்கலாயினர். நகரமெங்கும் அலங்கரிக்கப்பட்டது. குடிமக்கள் அனைவரும் மன்னன் மகளின் மணவினைச் செய்தியைக் கேட்டு மகிழ்ந்தனர்.

ஒருநாள் இராஜ ராஜனும் விமலாதித்தனும் ஓரிடத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அச்சமயத்தில் இராஜ ராஜன் தன் மகள் குந்தவையை அவனுக்கு மணம் செய்துகொடுக்கப் போவதாக எண்ணியுள்ளதையும், அதற்கெனக் காரியங்கள் நடைபெற்று வரு

வதையும் விமலாதித்தனிடம் கூறினன். அரசன் கூறி யதைக் கேட்ட விமலாதித்தன் பெரிதும் மகிழ்ந்தான்; இராஜ ராஜனின் பெருங்குணங் கண்டு வியந்தான்; குந்தவையின் உயர்குணத்தையும் உண்மை யன்பினை யும் எண்ணிக் களித்தான். விமலாதித்தனுக்கு மண வினை நாளும் தெரிவிக்கப்பட்டது.

சோதிடர்கள் குறித்த மணவினை நாள் நெருக்கி யது. அரண்மனையில் எங்கும் பரபரப்பாக வேலைகள் நடைபெற்று வந்தன. அரண்மனை முழுவதும் செவ் வையாக அலங்கரிக்கப்பட்டது. தஞ்சை நகர் தென் னிந்தியாவின் பூந்தோட்டம் என்னும் பெயர் பெற்றது. குந்தவையின் மணத்திற்காக அலங்கரிக்கப் பெற்ற அப்பொழுது அதனழகைக் கூறவும் வேண்டுமோ? அந்நகரைக் கண்டு நாணியே அமரர் வாழ்பதி அந்த ரத்தில் அமைந்தது என்னலாம்படி தஞ்சை நகர் பொலி வுற்று விளங்கியது. தஞ்சையில் ஜனக் கூட்டங்கள் நிறைந்திருந்தன. பற்பல தேயத்து மன்னர்கள் தங் கள் சேனைகளுடன் அரும் பொருள்கள் பல எடுத்துக் கொண்டு தஞ்சைக்கு வந்தனர். அவர்களை யெல்லாம் ஏற்றவாறு உபசரித்து இராஜ ராஜன் மரியாதை செய் தான்.

மறையவர்கள் வெளி நாடுகளுக்குச் சென்று புண்ணிய நதிகளிற் றோய்ந்து தங்கக் குடங்களில் நீர் முகந்துகொண்டு யானைகளின்மீது அமர்ந்து வேத மோதிக்கொண்டு வந்து சேர்ந்தனர். மணவினை தின

மும் வந்தது. அன்று அரண்மனையிற் கூட்டங் கூட்டமாக ஜனங்கள் வந்து கூடினர். மன்னர்களும் மறையவர்களும் செல்வர்களும் மடந்தையர்களும் மங்கல மணவினை காண மகிழ்ந்து வந்திருந்தனர். விமலாதித்தன் அன்று கொண்ட மகிழ்ச்சிக்கு அளவே யில்லை. அவனை நன்னீராட்டி, நல்லாடை யுடுத்தி, அணி கலன்கள் பல அணிவித்து மணவினை மண்டபத்தில் இருந்த அரதந பீடமிசை அமரச் செய்தனர். குந்தவையை அரண்மனைப் பெண்கள் மணங் மகழும் புனித நீர்கொண்டு ஆட்டுவித்து, ஆடை அணிகள் அணிவித்து, நெற்றியில் கஸ்தூரித் திலகமிட்டு அழைத்துவந்து மண மண்டபத்தில் விமலாதித்தன் பக்கலில் இடப்பட்டிருந்த ஓர் அந்தர பீடத்தில் அமரச் செய்தனர். மணவினையின் வேள்விச் சடங்குகள் முறையே நடந்தேறின. முகூர்த்த கடிகை நணுகுதலும் விமலாதித்தன் கையில் மங்கலநாண் கொண்டு மறையவர் வேதம் ஓத, மங்கையர் பல்லாண்டு பாட, பேரிகை முதலிய வாத்தியங்கள் முழங்க, அனைவரும் வாழ்த்த, குந்தவையின் கழுத்தில் அதனைப் புனைந்தான். அவ்வைபவத்தைக் கண்டு அனைவரும் மகிழ்ந்தனர். பின் தீவலம் வந்தும், அம்மி மிதித்து அருந்ததி காட்டியும், மற்றும் செய்யவேண்டுவனவற்றைச் செவ்வையாக விமலாதித்தன் செய்து முடித்தான். அங்கு வைபவங் காணவந்திருந்த மன்னர்கள் தாங்கள் கொண்டுவந்திருந்த அரும்பொருள்களை விமலாதித்தனுக்கும் குந்தவைக்கும் அளித்தார்

கள். இராஜ ராஜன் பல அரிய பொருள்களைத் தன் மக ளுக்கு வரிசையாகக் கொடுத்தான். அங்கு வந்தோர் களுக் கெல்லாம் உடையும் உணவும் திரவியமும் கொடுக்கப்பட்டன. அனைவரும் மணவினை கண்டு மகிழ்ந்து மன்னனைப் போற்றினர். மிக்க சீருடனும் சிறப்புடனும் விமலாதித்தனுக்கும் குந்தவைக்கும் மணவினை நடந்தேறியது.

## X. விமலாதித்தன் நாடடைதல்

இராஜ ராஜன் தன் மருகனை மிக்க அன்புடன் நேசித்துவந்தான். அவன் வேங்கை நாட்டை விமலாதித்தனுக்கு வழங்கி அவனை அந்நாட்டிற்குத் தனியரசனாக்கினான். அவனைச் சிலகாலம் தன்னிடத்தே இருக்கும்படி அவன் வேண்டிக்கொண்டான். விமலாதித்தனும் மன்னன் விருப்பத்தின்படி சிலகாலம் தஞ்சையிலே இருந்தான். குந்தவை தன் கணவனிடத்தில் நிறைந்த அன்பும் உயர்ந்த பக்தியு முடையவளாய் மலரும் மணமும் போலவும், மணியும் ஒலியும் போலவும், அன்றிற் பறவைகள் போலவும் அமைந்து ஒழுகி வந்தாள். அவள் பல்லாற்றானும் விமலாதித்தனைக் களிப்பித்து வந்தாள். இவ்வாறிருக்கும் நாளில் குந்தவை கருக்கொண்டாள். இராஜ ராஜன் தன் மகள் குந்தவை வயிறு வாய்த்திருத்தலைக் கேட்டு மனமகிழ்ந்தான்.

முறையே பத்துத் திங்களும் சென்றன. ஒரு நன்னாளில் நல்ல ஓரையில் குந்தவை ஓராண் மகவைப் பெற்றெடுத்தாள். குந்தவைக்கு ஆண் குழந்தை பிறந்திருத்தலைக் கேட்ட மன்னன் மிக்க சந்தோஷ மடைந்தான். மறையவர்களுக்கும் வறியவர்களுக்கும் வெறுக்

கையை வாரிக் கொடுத்தான். பத்துத் தினங்களும் கழிந்தன. மன்னன் பதினொருவது நாளில் குழந்தைக்குச் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்து இராஜ ராஜன் என்று பெயரிட்டு மிக்க அன்போடு வளர்த்து வருவானாயினன். குழந்தையும் அறிவோர் நட்பும் அம்புலிப் பிறையும் வளர்வதொப்ப வளர்ந்துவந்தது. சளுக்கிய விமலாதித்தனுக்குப் பிறந்தமையால் சளுக்கிய இராஜ ராஜன் என்று பின்னுள்ளோர் அக்குழந்தையை அழைத்தனர்.

விமலாதித்தன் தன் நாடு அடைய விரும்பினன். அவன் தன் கருத்தைக் குந்தவைக்குத் தெரிவித்தான். குந்தவை தன் தந்தைக்குத் தெரிவித்தாள். உடனே இராஜ ராஜன் அவர்கள் பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான். யாவும் சித்தமாயின. சோதிடர்களைக்கொண்டு பிரயாணத்திற்கு நன்னளொன்று ஏற்படுத்தப்பட்டது. வேங்கை நாட்டிற்கு முன்னமேயே ஆட்களை அனுப்பி அங்கு யாவற்றையும் நிரப்பி வைக்கும்படி இராஜ ராஜன் ஏற்பாடுகள் செய்தான். வேங்கை நாட்டுக் குடிகள் விமலாதித்தனது வரவை அன்புடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். பிரயாணத்திற்கு உரிய நாள் வந்ததும் விமலாதித்தன் குந்தவையையும் குழந்தையையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டான்.

இராஜ ராஜன் தன் மகளுக்கும் மருமகனுக்கும் அரிய பொருள்கள் பலவற்றை யளித்து அவர்களைத்

தங்கள் நாடு செல்லும்படி விடுத்தான். விமலாதித்தனும் குந்தவையும் குழந்தையுடன் புறப்பட்டுத் தானைகள் சூழத் தங்கள் நாடு செல்லப் பிரயாணமாயினர். இடை இடையே பல குறுநில மன்னர்களின் வேண்டுகோள்களுக் கிணங்கி ஆங்காங்குத் தங்கித் தங்கள் பிரயாண சிரமத்தை யாற்றிக்கொண்டும் அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றிக் களிப்பித்தும், பல புண்ணிய நதிகளில் தோய்ந்தும், பல க்ஷேத்திரங்களில் தங்கி இறைவனை வணங்கியும், தங்கள் பிரயாணத்தை ஒரு சில திங்களுள் முடித்துக்கொண்டு வேங்கை நாட்டுத் தலை நகரான கலியாணபுரத்தை யடைந்தனர்.

விமலாதித்தன் வருகின்றான் எனக் கேள்விப்பட்ட கலியாணபுர நகர மாந்தர் அனைவரும் அந்நகரை அலங்கரித்திருந்தனர். அவர்கள் மங்கல வாத்தியங்கள் முழங்க அரசனையும் அரசியையும் எதிர்கொண்டழைத்துச் சென்றனர். அரசனும் அரசியும் குழந்தையுடன் அரண்மனை புகுந்தனர். அவர்களைக் கண்ட நகர மாந்தர் அனைவரும் களிப்பென்னுங் கடலுள் ஆழ்ந்தனர். அரசன் அவரவர்களுக்கு ஏற்றவாறு உபசாரங்கள் செய்து எல்லோரையும் போக விடுத்தனன். பின் ஒரு நன்னாளில் விமலாதித்தன் அரியணையேறி யரசு புரியத் தொடங்கினன். அவனாட்சியில் யாவரும் இன்புற்றிருந்தனர். விமலாதித்தனும் குந்தவையும் குடிகட்குத் தந்தையும் தாயும் போன்று பல நன்மைகளைப் புரிந்து வந்தனர்.

# XI. சோழன் திருமுறை வகுத்தல்

இராஜ ராஜன் குடிகளுக்குப் பல்வகையிலும் நன்மைகள் பலவற்றைப் புரிந்து பேரும் புகழும் எய்தினன். திக்கு விஜயங்கள் முற்றியபின் அவன் இராஜ்யம் ஏறக்குறைய சென்னை ராஜதானியின் முக்காற் பங்கு விஸ்தீரண முள்ளதாயிருந்தது. பலர் கப்பங்கட்டுஞ் சிற்றரசர்களாய் ஏற்பட்டபடியால் சோழனுக்கு வருவாயும் அதிகமாயிற்று. தன் நாட்டை எவ்விதத்தில் உன்னத நிலைக்குக் கொண்டுவருவதென்று எண்ணிக்கொண்டிருந்த கவலை ஒருவாறு மன்னன் மனத்தைவிட் டொழிந்தது. ஆனால் இராஜ ராஜன் மனத்தில் வேறொரு கவலை குடிகொண்டிருந்தது. அது என்னவெனில் எவ்வகையில் நாட்டை மேன்மைப்படுத்துவது என்பதே. அதற்காக அவன் பல விதத்திலும் முயன்று வருவனாயினன். இராஜ ராஜனுக்குக் குடிகளின் நன்மைகளை நாடிப் புரிவதே பெருங் கடமையாயிற்று.

இராஜ ராஜன் தன் நாடு முழுவதையும் அளந்தான். குடிகளிடமிருந்து ஆறில் ஒரு பங்கு கடமை கொண்டான்.. நாடெங்கும் அங்கங்கே நியாய சபைகளை ஏற்படுத்தினன். அந்நியாய சபைகளில் குடிஜனங்களே அங்கத்தினர்கள் ஆவதற்குத் தேறுதல்

கள் உண்டு. குடிகளில் ஒருதிறமான நிலையுள்ளார்க்கு நியாயசபை அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்க முழுச் சுதந்தர முண்டு. கல்விக் கழகங்களையும் வைத்திய சாலைகளையும் உண்டாக்கிக் குடிகளுக்கு நன்மை யுண் டாகும்படி மன்னன் செய்தான்.

இவ்வாறு குடிகளுக்கு நன்மை புரிதலிலேயே கண்ணுங் கருத்துமாய் இருந்த இராஜ ராஜன் புகழ் எங்கும் பரவியது. தென்னாட்டுக் குடிகளில் இராஜ ராஜனைப் போற்றுதாரே இல்லை யென்று கூறலாம். குடிகள் அவனை மும்முடிச் சோழன் என்றும், க்ஷத்தி ரிய சிகாமணி என்றும், அருள்மொழித் தேவன் என் றும், இராஜ சிரயன் என்றும், சிவபாதசேகரன் என் றும் போற்றிக் கூறினர். பின்னர் மேற்கூறியவை அவனுடைய பெயர்களாகவும் வழங்கலாயின.

இராஜ ராஜன் தன் ஐந்து மனைவிமார்களுடனும் அன்போடிருந்து இன்பவரசு நடத்திவந்தான். அவனுக்கு இராஜேந்திர குந்தவை என்னும் இருமக்களைத் தவிர மாதே வடிகள் என்னும் குமாரத்தியும் மற்றொரு பெண் குழந்தையும் உண்டு. வயது முதிர முதிர இராஜ ராஜ னுக்கு உலக வெறுப்புண்டாயது. இகத்தில் யாவும் நிலையற்றவை என்பதைத் தன் கூரிய அறிவால் ஆய்ந் தறிந்தான். மக்களாகப் பிறந்தார் எய்தற்குரிய முத் தியை யறம் பல புரிந்து நன்னெறி புகுந்து இறைவன் திருவருள் பெற்று எய்தும் வண்ணம் அவன் முயலு வானாயினன். அவன் மனைவிமார்களும் சிறந்த அறிவும்

உயர்ந்த நோக்கமும் உடையவர்களாதலின் மன்னன் விழைவை மகிழ்வுடன் நிறைவேற்றுவதற்குத் துணை நின்றனர். இராஜ ராஜன் சிறந்த சைவன். அவன் தன் வாணுளை வீணுக்காமல் அறம் பல புரியத் தொடங்கி நெறிவழுவாது செய்துவந்தான்.

கி. பி. 1012-இல் இராஜ ராஜன் துலாபாரம் புகுந்தான். துலாபாரம் என்பது தான் ஒரு தராசுத் தட்டில் ஏறித் தன்னளவு எடையுள்ள திரவியத்தை அந்தணார்களுக்குக் கொடுப்பது. இவன் மனைவி தந்திசக்தி விடங்கி தன்னளவு எடையுள்ள பொன்னைத் தானமாகக் கொடுத்தாள். இவ்வாறு அவர்களிருவரும் துலாபாரம் புக்கதையும், இரணிய கர்ப்பம் புக்கதையும் திருவிசைநல்லூர்ச் சாசனம் தெளிவாகக் கூறுகின்றது.

இராஜ ராஜன் கல்வி கேள்விகளிற் சிறந்தோன் என்று கூறினேம் அல்லவா? அவன் கல்விமான்களிடத்திற் சிறந்த பற்றுடையவன்; தமிழ்ப் புலவர்கள் பல்லோர் அவன் சபையில் இருந்தனர். அவன் சிற்றப்பனுகிய மதுராந்தகனின் மகன் கண்டராதித்தன் துறவியாகச் சிறந்து விளங்கினுன். அவனை அக்காலத்தில் கண்டராதித்த தேவர் என்றழைத்தனர் என்று படித்தோமல்லவா? அவரும் அவன் சபையில் இருந்தனர். நம்பியாண்டார் நம்பி என்ற பெரியார் இராஜ ராஜன் காலத்திலேதான் இருந்தார். அவர் இறைவன் திருவருள் பெற்றவர். கல்விக் கடலைக் கடந்து ஞானக் கரை நண்ணியவர்.

ஒருநாள் இராஜ ராஜன் அரசவையில் அமர்ந் திருக்கையில் ஒரு சிவனடியார் வந்து அரசனை அடி பணிந்து அமர்ந்து ஒரு தேவாரப் பதிகம் பாடினர். அப்பதிகத்தைப் பாடக் கேட்ட இராஜ ராஜன் கண்ணீர் விடுத்து அப்பெரியாரை நோக்கி, "அன்புடைப் பெரி யீர்! தாம் கூறிய பாடல்கள் யாவராற் பாடப்பட்டன? எந்நூல்களில் உள்ளன? அவைகளை அறிய விரும்பு கின்றேன்," என்றனன். அப்பெரியார் அரசனை நோக்கி, "மன்னவ, நான் கூறிய செய்யுட்கள் சிவநேசச் செல் வர்களாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்திகள் என்னும் மூவரும் திருவாய் மலர்ந் தருளிய தெய்வத் தமிழ்த் திருமறையில் அமைந்துள் ளன" என்று கூறினர். அதனைக்கேட்ட அரசன், "ஐயனே, அத்தேவாரத்தை—தெய்வத் திருவருட் களஞ் சியத்தை யான் எங்குப் பெறுவேன்! எப்பொழுது ஓதுவேன்?" என்று வாய்விட்டுக் கூறிக் கண் ணீர் சொரிந்தனன். அச்சமயம் அப்பெரியார் மன் னனை நோக்கி, "மன்னவ! ஆண்டவன் அருளால் நீ அவற்றைப் பெறுவாய். திருநாரையூர் என்னும் தலத் தில் நம்பியாண்டார் நம்பி என்ற இறைவன் இன்ன ருள் பெற்ற ஒருவர் இருக்கிறார். அவர் தெய்வ பக்தி யில் நிறைந்து எப்பொழுதும் இறைவனை வழிபடுதலி லேயே தம் காலத்தைக் கழித்துவருகிறார். அவரி டம் சொன்னல் உன் விழைவு முற்றுப்பெற அவர் அருள்புரிவார் என்று கூறி அரசனிடம் விடைபெற்

றுக்கொண்டு அவ்விடம் விட்டு அகன்றார். இராஜ ராஜன் உடனே திருநாரையூர் செல்லப் பிரயாண மானான்.

யானைமீதேறிக்கொண்டு இராஜ ராஜன் திருநாரையூர் நோக்கிச் செல்ல, மற்றவர்கள் ஒட்டகம், குதிரை முதலிய வாகனங்களின்மீ தேறிக்கொண்டு சென்றனர். இராஜ ராஜன் விரைந்து சென்று திருநாரையூரை யடைந்தான். அவ்வூரார் அரசனைப் பணிந்து வரவேற்றனர். பின், அரசன் நம்பியாண்டார் நம்பி யிருக்குமிடம் அறிந்து சென்று அவரைப் பணிந்து நின்றனன். அவரும் அரசனைப் பணிந்தார். இருவரும் நெடு நேரம் அளவளாவிக்கொண்டிருந்தனர். அச்சமயம் அரசன் நம்பியாண்டார் நம்பியிடத்தில் தான் அவரைக் காண வந்ததன் காரணத்தைக் கூறினான். நம்பியாண்டார் நம்பி அரசன் சொன்னதைக் கேட்டு மனமகிழ்ந்தனர்.

மறுநாட், காலையில் அனைவரும் திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் கோயிலிற் குழுமினர். அரசனும் அவனைச் சார்ந்தோரும் அங்கு வந்தனர். நம்பியாண்டார் நம்பிகளும் அங்குவந்து சேர்ந்தார். பின் அனைவரும் கண்டுகளிக்க நம்பியாண்டார் நம்பி பொல்லாப் பிள்ளையாருக்கு அபிஷேகம் முதலியன செய்து அலங்கரித்துப் பூசை புரிந்தனர். அப்பொழுது இறைவன் திருவுளம் மகிழ்ந்து, "தேவாரத் தொகுப்பு தில்லையில் கிடைக்கும்" என அருள் பாலித்தனன். நம்பியாண்டார் நம்பி அதனை அரசனுக்குக் கூறினார். உடனே

அரசன் தில்லையம் பதியை விரைவில் அடைந்து தேவாரத் தொகுதியைக் காண விழைந்தனன். அரசன் விருப்பப்படியே நம்பியாண்டார் நம்பியும் தில்லைக்குச் செல்ல உடன்பட்டனர். எல்லோரும் தில்லைக்குப் புறப்பட்டனர்.

எல்லோரும் தில்லையை யடைந்தனர். அரசனும் நம்பியாண்டாரும் மற்றவர்களும் அம்பலவன் ஆலயம் நண்ணினர். இறைவனை எல்லோரும் பணிந்தனர். அரசனும் மற்றவர்களும் அங்கிருந்த தில்லைவாழ் அந்தணர்கள் மூவாயிரவரையும் பணிந்தனர். இறைவன் திருவருளால் அறிந்து நம்பியாண்டார் நம்பி தன்னிடம் கூறியவற்றை அரசன் அவர்களிடம் கூறினான். அவர்கள் அதைக்கேட்டு மன்னன் கூறியபடி கோயிலுக்குட் சென்று தேடுகையில் தேவாரப் புலவர் மூவருடைய கரங்களின் அடையாளக் குறிப்புக்களைக் கண்டனர். அக்குறிப்புக்கள் ஒரு பெட்டகத்தின்மீது காணப்பட்டன. ஆதலின் அப்பெட்டியை அவர்கள் திறக்க முயன்றும் பயன்படாமை கண்டு வருந்தினர். அவர்கள் மன்னனை நோக்கி, "மன்னவ, இப்பெட்டகத்தின் மூடி மூவர்தம் திருக்கரத்தால் முத்திரை பெற்றுள்ளதாதலால் அம்மூவரும் வந்தாலன்றித் திறக்கவியலாது" என்றனர்.

அதுகேட்டு இராஜ ராஜன் மனங் கவன்றான். சிவபெருமான் திருவடி நிழலை யெய்தி வாழ்வாரை எங்ஙனம் அழைத்துவருதல் கூடும் என்று மன்னன் கவற்சி

யடைந்தான்; பெருமூச்செறிந்தான்; செய்வது யாதென நெடுநேரம் சிந்தித்தான். அவன் பின்னர் தெளிந்து நம்பியாண்டார் நம்பியை நோக்கினன். அவர் மன்னவனை நோக்கி அக்கோயிலில் எழுந்தருளி யிருக்கும் மூவருக்கும் திருவிழாச் செய்யின் அன்னன் கொண்ட எண்ணம் நிறைவேறும் என்றனர்.

இராஜ ராஜன் அவ்வாறே தேவாரப் புலவர் மூவர்க்கும் திருவிழா வெடுத்தனன். அம்மூவர் திருவுருவங்களையும் எழுந்தருளச் செய்து அப்பெட்டகத்தின் முன்னர்க் கொண்டு வந்து நிறுத்திக்கொண்டு, மன்னவன் தில்லைவாழ் அந்தணர்களைப் பணிந்து, "மூவரும் எழுந்தருளினர்!" என்று மொழிந்தான். அவர்கள், "அவ்வாறாயின் கதவமும் தானே திறக்கும்" என்று கூறி வாய்மூடுமுன் படீரெனப் பெட்டகத்தின் கதவு திறந்தது. அவ்வொலி அங்கிருந்த எல்லோர் செவிகளிலும் பட்டது. அனைவரும் அதனைக் கண்டு ஆச்சரியமுற்றனர்.

இராஜ ராஜன் அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. இறைவன் திருவருளை நினைந்து அவன் வியந்தான். அப்பெட்டகத்தை மன்னன் உற்று நோக்கலும் அதனுள் தேவாரப் பகுதிகள் இருக்கக் கண்டான். ஆனால் அவைகளுட் பல செல்லரித்து அழிந்தொழிந்தன. முழுவதும் செம்மையுள்ள பகுதிகளைப் பெற்ற மன்னன் சிதம்பரேசன் திருமுன் அவைகளை வைத்து நம்பியாண்டார் நம்பியின் துணைகொண்டு திருஞான சம்பந்த

மூர்த்திகள் அருளிய தேவாரத்தை மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாய் மலர்ந்த தேவாரத்தை மூன்று திருமுறைகளாகவும், சுந்தர மூர்த்திகள் தேவாரத்தை ஒரு திருமுறையாகவும் வகுத்து ஏழு திருமுறைகளாகத் தொகுத்தனன். பின் மன்னன் மாணிக்கவாசகர் திருவாய்மலர்ந்த திருவாசகம், திருக்கோவையார் என்பவைகளை எட்டாம் திருமுறையாகத் தொகுத்தான். பின், திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த் தேவர், பூந்துருத்தி நம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலிய முதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் முதலிய ஒன்பதின்மர் அருளிய திருவிசைப் பாக்களையும், சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டினையும் சேர்த்து ஒன்பதாந் திருமுறையாக இராஜ ராஜன் வகுத்தான். திருமூல நாயனார் அருளிய திருமந்திரம் பத்தாந் திருமுறையாக வகுக்கப்பட்டது. பின், மன்னன் நம்பியாண்டார் நம்பியடிகளை வேண்டிக்கொண்டவாறு அவர் தாம் அருளியவற்றையும், திருவாலவாயுடையார், காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர்கோன் நாயனார், சேரமான் பெருமாள் நாயனார், நக்கீரதேவர், கல்லாட தேவ நாயனார், கபிலதேவர், பரணதேவர், இளம் பெருமானடிகள், அதிராவடிகள், பட்டினத்துப் பிள்ளையார் முதலியார் எழுதியவைகளையும் சேர்த்துப் பதினொராந் திருமுறையாக வகுத்துத் தந்தார். இப் பதினொரு திருமுறைகளையும் வகுத்தருளியதனால் இராஜ

ராஜனுக்குத் திருமுறை கண்ட சோழன் என்ப் பெயர் உண்டாயிற்று.

பின் இராஜ ராஜன் திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த திருவெருக்கத்தம் புலியூர் நங்கை ஒருத்தியின் துணைகொண்டு இத்திருமுறைகளிலுள்ள பதிகங்களுக்குப் பண்களை வகுத்திட்டான். அன்று முதல் தமிழ் நாடெங்கும் சைவ மணம் கமழ்ந்தது.

# XII. இறை பணி

திருமுறை கண்ட சோழன் தினந்தோறும் தேவார திருவாசகங்களையும் மற்றத் திருப்பாடல்களையும் பாராயணஞ் செய்துவருவானானான். தேவாரப் பதிகங்களைப் படிக்குந்தோறும் அவன் மனம் அனலிடைப்பட்ட மெழுகென உருகி, இறைவனிடத்தில் குறையா அன்பினைப் பெருக்கிப் பேரானந்தப் பெருஞ் சலதியில் மூழ்கித் திளைக்கும். அரசனிடத்தில் உண்டாகிய தெய்வ பக்தி நாடோறும் முதிர்ந்து அவனை இறைபணி புரியும் ஒரு பெருந் தொண்டிற் புகுத்தியது. மன்னன் உலக வாழ்வைப் பொய்யென உணர்ந்தனன்.

ஒருநாள் மன்னன் அரியணைமீதமர்ந்து அரசவையில் வீற்றிருக்கையில் அவன் மனத்தில் ஒரு எண்ணம் தோன்றியது. அது இறைபணி புரியும் எண்ணத்தை நினைப்பூட்டியதும் மங்கை பாகனுக்கு மாண்புடை ஆலயம் எடுக்க அவன் விழைந்தான். அவன் தன் எண்ணத்தை அமைச்சர்களுக்கு அறிவித்தான். அவர்கள் மன்னன் நினைத்ததை மகிழ்வுடன் செய்ய ஒப்புக்கொண்டனர். அரசன் தஞ்சையில் மதியணி வேணிப் பெருமானுக்கு ஓர் ஆலயம் எடுக்குமாறு அனுமதி யளித்தனன். அவர்கள் அப்பணியை நிறை

வேற்றுவதற்கு முயற்சி செய்தனர். அவர்கள் பற்பல தேயங்களிலிருந்தும் சிறந்த சிற்ப வேலைக்காரர்களேயும் கொல்லர்களேயும் தச்சர்களேயும் வரவழைத்தனர்.

ஆலய மெடுக்கப் பெரு முயற்சிகள் நடைபெற்று வந்தன. பெருங் கற்களும் மரங்களும் பல நாடுகளி லிருந்தும் கொண்டுவரப்பட்டன. தென்னாட்டில் உள்ள ஆலயங்களுக்குள் முதன்மை பெறுமாறு சிறப்பாகப் பலதிற நுட்ப வேலைப்பாடமைந்த விமானங்களும் கோபுரங்களும் அமைத்து அவர்கள் ஆலயம் எடுத்தனர். ஆலயம் நாளுக்கு நாள் உயர்ந்து எழுவது கண்டு மன்னன் மகிழ்ந்தான். சிலவாண்டுகளில் ஆலய வேலே முடிவு பெற்றது. மன்னன் மறையவர்களேக் கொண்டு இறைவன் திருவுருவினைப் பிரதிஷ்டித்துக் கும்பாபி ஷேகம் செய்தான். அவன் அக்கோயிலுக்கு இராஜ ராஜேச்சரம் என்று பெயரிட்டான். அது தென்னிந்தி யாவில் உள்ள அற்புதக் காட்சிகளில் ஒன்முக இன்றும் நின்று விளங்குகின்றது. அதற்குப் பிரஹதீச்சரம் என்ற மற்ருெரு பெயரும் உண்டு.

அக்கோயிலுக்குள் மண்டபங்கள் பல இருக்கின் றன. அவைகளில் தெய்வத் திருவுருவச் சிலேகள் பல உள்ளன. அவைகளேக்கொண்டே நம் முன்ஞேர் களின் சிற்ப வேலைத் திறனே அறிய வேண்டியதா யிருக்கின்றது. அக்கோயிலில் உள்ள நந்தியைப் போல் பெரிதானதொன்று வேறெங்குமே இல்லே. அக்கோயிலின் கோபுர நிழல் பகற்பொழுதில் பூமியிற்

படுவதில்லை. இராஜ ராஜன் அக்கோயிலுக்கு வேண்டிய பூமிகளை இறையாக விட்டும், திரண்ட திரவியத்தை யளித்தும் இறைபணியிற் குறைவுறாமல் யாவற்றையும் செவ்வனே நடத்திவந்தான்.

இந்தியாவில் ஆலயங்கள் பலவுள. அவைகள் பெரும்பாலும் மன்னர்களாற் கட்டப்பட்டனவே. அவைகள் பெரியனவாகவும் மிகவும் சித்திர வேலைகள் அமைந்தனவாகவும் காணப்படுகின்றன. அவைகள் பெரும் பொருட் செலவு செய்து கட்டப்பட் டிருத்தற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. அக்காலத்தில் பெருங் கோயில்கள் அமைக்கப்பட்டு நிலங்களும் செல்வங்களும் அக்கோயில்களுக்கு அரசர்களால் அளிக்கப் பட்டிருந்தன. அந்நிலங்களிலிருந்து வரும் வருவாயைக்கொண்டும், திரவியத்தைக் கொண்டும் திருவிழாக் களும் நித்திய நைமித்திக பூசைகளும் நடைபெற்று வந்தன. கோயில்களுக்கு இவ்வா றன்றி வேறுவகையான வருவாய்களு முண்டு. கோயில்களைப் பெரியனவாகக் கட்டுவானேன்? அவைகளினால் இந்தியாவிற் குண்டான நன்மைகள் யாவை? பெருங் கோயில்களை நம்முன் னோர்கள் கட்டியிருத்தலால் நம் முன்னோர்களைப்பற்றித் தெரிந்துகொள்வன யாவை? இவைகளை யெல்லாம் நம்மில் ஒவ்வொருவரும் நன்கறிதல் வேண்டும்.

நம் முன்னோர்களின் பண்டைக் காலத்துச் சீரிய வாழ்க்கைநிலை, இறை மாட்சி, கல்வி யறிவு, நாகரிகம், சிற்பம், செல்வம், குணம், ஒழுக்கம் முதலியனவற்றை

அங்கை நெல்லிக் கனியென விளக்கிக் காட்டுவன நம் நாட்டில் அவர்களாற் கட்டப்பட்டு இன்றும் நின்று நிலவும் பெருங் கோயில்களே. ஆதலால் நம் முன்னோர்கள் நிலையினை யறிதற்குப் பெருங் கோயில்களைப் பற்றிப் பரிசீலனை செய்துவருவதால் அன்னார் சரிதைகள் வெளியாகின்றன. எல்லாத் தேசத்தவர்களும் தங்கள் நாட்டு முன்னோர்கள் செய்த அருஞ்செயல்களை ஆராய்ந்து தம் நாடுகளை முன்னேற்றம் பெறச் செய்யும் இந்நாளில் நம் முன்னோர் செயல்களை ஆராய்தல் நம் கடனன்றோ ?

ஆதிக் காலத்தில் பெருங் கோயில்களிலுள்ள பெரு மண்டபங்கள் கல்விக் கழகங்களாகவும், நீதி மன்றங்களாகவுங் உபயோகிக்கப்பட்டு வந்தன. இக் காலத்தில் கல்லூரிகளும் கலாசாலைகளும் அங்கங்கே தனித்தனிக் கட்டடங்களில் அமைந்து உள்ளன. முற் காலத்தில் அவைகளுக்கென்று தனிக் கட்டடங்கள் அமைக்காது கோயில் மண்டபங்களில் கல்விக் கழகங் களை நம் முன்னோர்கள் வைத்திருந்தனர். இதனால் அவர்கள் சிக்கனம் நன்கு விளங்கும். அரசன் உறையும் தலை நகரில்மட்டும் தனியாகக் கல்விக் கழக மண்டபம் கட்டப்பட்டிருக்கும். நீதி மன்றங்களும் இவ்வாறே அமைக்கப்பட்டிருந்தன. இதனால் நம் முடைய முன்னோர்களின் சீரிய வாழ்க்கைநிலை விளங்குகிறது. இந்துக்கள் தெய்வபக்தி யுடையவர் கள். தெய்வ சன்னிதானத்தில் கல்வி கற்றுக் கொடுத்

தலும், வழக்குகளையும் குடிகளின் குறைகளையுங் கேட்டுத் தீர்த்து நீதி புரிதலும் ஏற்றமானதென நினைத்தே நம் முன்னோர்கள் கல்விக் கழகங்களையும் நீதி மன்றங்களையும் பெருங்கோயில் மண்டபங்களில் நிறுவுவா ராயினர். அவர்கள் நீதி முறை வழுவினோர்க்குத் தக்க தண்டனை விதித்து நீதியைப் பரிபாலித்து வந்தனர். குற்றங்கள் செய்தாருக்கும் நில்வரி கொடுத்தல் முதலியவற்றில் வழுவினோர்க்கும் அபராதங்கள் விதித்து, அவ்வபராதத் தொகையைக் கோயிற் செலவிற்கும், கல்விப் பயிற்சிச் செலவிற்கும் அவர்கள் செலவிட்டுவந்தார்கள். பொதுக் கூட்டங்கள் பல நடைபெறுதற்குக் கோயில் மண்டபங்கள் பெரும்பயனளித்து வந்தன. யாத்திரீகர்களுக்குத் தங்குமிடங்களாகவும் அவைகள் உபயோகப்பட்டன.

நெடுங்காலம் நிலைபெற்றுத் திகழவேண்டிய விஷயங்களை நம் முன்னோர்கள் கோயில் மதிற் சுவர்களிற் பெருங் கற்களிற் பொறித்துவந்தனர். அவர்கள் அரசியல் முறைகளைக் கற்களிற் பொறித்து வைத்திருந்தனர். மற்றும், அந்தந்த நாடுகளில் ஆண்ட அரசர்களின் உருவங்களைச் சித்திரங்களாகவோ சிலைகளாகவோ நம் முன்னோர்கள் கோயில்களில் அமைத்துள்ளனர். அவ்வாறு செய்து வைக்கப்பட்ட சித்திரங்கள், சிலைகள், கல்வெட்டுகள் முதலியவற்றைக்கொண்டு இக்காலத்தில் சிலாசாஸனப் பரிசோதகர்களின் உதவியால் நம் முன்னோர் சரிதையை ஒருவாறு நாம் ஆராய்ந்து அறி

கின்றோம். கோயில்களும் வேறுவேறு காலத்தில் வேறு வேறு விதமாகக் கட்டப்பட்டு வந்தன. யாளிகளின் உருவங்களைத் தூண்களி லமைத்துக் கட்டப்பட்ட கோயில்கள் பெரும்பாலும் பல்லவ வரசர்களாற் கட்டப் பட்டனவாகும். தூண்களிற் கொடி வேலைகளும் தெய்வ வுருவங்களும் அமைக்கப்பட்டுக் கட்டப்பட்டன வெல் லாம் தமிழ் மன்னர்களாற் சமைக்கப்பட்டன வாகும். விமானங்களினாலும் கோபுரங்களினாலும் வேற்றுமை யறிந்து இன்னார் கட்டினது இக்கோயில் என்று கூறி விடலாம். நம் முன்னோர்கள் சிற்ப வேலைகளிற் பண் டைக் காலத்திற் சிறந்து விளங்கினர் என்பதற்குக் கோயில்களே சான்று பகரும். விசித்திர வேலைபாடுக ளமைந்த வானளாவும் நெடுநிலைக் கோபுரங்கள் சமைத் தலும், சிலைகள் செய்தலும், குகைகளைக் குடைந்து கோயில்கள் கட்டுதலும், பெருங் கற்களிற் சிற்ப வேலைகள் செய்து நெடுந் தூணமைத்தலும், கண்டோர் வியந்து களிப்புறும் வண்ணம் தூண்களின்றி விமா னங்கள் அமைத்தலும் நம் முன்னோர்களின் சீரிய கல்வியறிவு, நாகரிகம், செய்வன்மை முதலியனவற்றை விளக்குவன வன்றோ ?

பெருநிலைக் கோபுரங்கள் வானளாவி நான்கு திக்குகளிலும் விளங்குவது - நகரினை யழகுபடுத்துவன வாகும்.

"கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்று கூறிய முன்னோர் மொழித்திறம் ஆராயத்


தக்கதாகும். வருணாசிரம தர்மங்களைக் கடைப்பிடித் தொழுகும் இந்துக்களிற் சில ஜாதியார் கோயிலுக்குட் பிரவேசித்து இறைவன் உருவினைக் கண்டு தொழற்கு இயலாதவராயிருத்தலின், அன்னார் நெடுநிலைக் கோபுரங் களைக் கண்டு தொழுது நற்பிறப் பெய்துந் திருப்பெறவே வானளாவுங் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் நம் முன்னோரின் மனநிலை நன்கு விளங்கும்.

ஒழுக்கத்திற் குறைவுபடாது வாழ்தலே மக்களுக் குச் சிறந்த கடமை யாகும். அவ்வாறு ஒழுக்கத்திற் சிறந்தொழுகுவோர் பல நியதிகட் குட்பட்டுத் தம் வாழ்க்கையை நடத்துபவராவர். அந்நியதிகள் அவ்வவர் கள் சரிந்தொழுகும் மதங்களாற் கூறப்படுவன வாகும். நீதிகளின் நெறி நின்று ஒழுகுவார் தெய்வபக்தி யுடையவராய் வாழ்வார். கல்லாதவர்களும் இறைவனை வழிபட்டுய்யவேண்டும். ஒரு பிறப்பிற் கல்வி யற்றவர்க ளாயினும் மறுபிறப்பிலேனும் கல்விச் செல்வம் பெற இறைவன் இன்னருள் வேண்டுமன்றோ? கல்லாதவர் களைக் கண்டு அஞ்சுவதாய் மணிவாசகப் பெருமான் கூறுவது நோக்கத் தக்கது. தெய்வபக்தியை யூட்டி நல்வழிப்படுத்தி அன்னார்களை இறைவ னருளுக்குப் பாத்திர ராக்குவதும் கோயில்களே.

## XII. தேவியின் திருப்பணி

இராஜ ராஜன் மனைவியர் ஐவர்களுள் திரைலோக்கிய மாதேவி ஒருத்தி என்பதை நாம் படித்தோ மல்லவா? அவள் கல்வி கேள்விகளிற் சிறந்தவள். ஒழுக்க நெறியிற் சிறிதும் வழுவாது ஒழுகி வருபவள்; கணவன் குறிப்பு அறிந்தொழுகும் தன்மையுடையவள்; அருங் குணங்கள் பல ஒருங்கே வாய்க்கப்பெற்றவள்; உயர்ந்த நோக்க முடையவள்; பிறருக்கு நன்மை புரிதலே தன் கடமை எனக் கொண்டொழுகும் ஒப்பற்ற உயர்குண முடையவள்; தெய்வ பக்தியிற் சிறந்தவள். இறைபணி புரியும் பேறு பெறுதல் பிறவிப் பெருங்கடலை நீந்துவதற்குத் தக்க சாதனமாகும் என்பதை அவள் நன்கறிந்திருந்தாள்.

அவளுடைய மனத்தில் ஓர் எண்ணம் தோன்றி நெடுநாளாக அவளை வருத்திக்கொண்டிருந்தது. மதிநதி சூடும் மங்கை பாகனுக்கு ஆலயம் எடுக்கும் பேற்றினைத் தான் எப்பொழுது அடைதற்கு இயலும் என்றே அவள் சிந்தித்துக்கொண் டிருந்தாள். ஒருநாள் திரைலோக்கிய மாதேவி இராஜ ராஜனோடு உல்லாசமாக உரையாடிக்கொண் டிருக்கையில் தன் கருத்தை அவனுக்குத் தெரிவித்தாள். மன்னன் தன் மனைவி இறைபணி புரிதலிற் பெருவிருப்புற் றிருத்தலை யறிந்து



லோகமாதீச்சரம்—திருவையாறு

சந்தோஷமடைந்தான் அவன் அவள் விரும்பியவாறே சிவபெருமானுக்கு ஆலயம் சமைக்குமாறு அநுமதி யளித்தான். அநுமதி பெற்ற திரைலோக்கிய மாதேவி அகமகிழ்ந்தாள்.

கணவன் அநுமதி பெற்ற திரைலோக்கிய மாதேவி கங்காதரனுக்குக் காவிரிக் கரையில் ஆலயம் எடுக்க விழைந்தனள். காவிரியிலிருந்து ஐந்து கிளை நதிகள் பிரிந்து அடுத்தடுத்து ஓடிப் பாய்ந்து செழுமையை யுண்டாக்கும் ஒரு பிரதேசம் அவள் விரும்பியவாறு ஆலயமெடுக்க ஏற்றதா யிருந்தது. அப்பிரதேசத்தைக் கண்ணுறுந் தோறும் ஐந்து பெரு உப நதிகளும் விரிந்துவும் பாய்ந்து வளப்பத்தை யுண்டாக்கும் பாஞ்சால தேசம் அவள் நினைவுக்கு வந்தது. அப்பிரதேசத்தில் ஒரு சிறந்த சிவஸ்தலம் இருப்பதுபோல் காவிரிக் கரையிலும் ஒரு சிவஸ்தலம் இருத்தல் வேண்டும் என அவள் கருதினள். அவ்வாறு கருதிய அவள் எவ்விடம் அரனுர்க்கு ஆலயம் எடுக்க அமைவுடையதாகும் என்று தேடித் திரிகையில் திருவையாறு என்னுந் தலமே அரனுர்க்கு ஆலயம் எடுக்க அமைவுடைய தலமென அவள் மனத்தில் தோன்றியது. உடனே அவள் பற்பல சிற்பிகளையும் கொல்லர்களையும் அழைத்துவந்து அழகியதோர் ஆலயம் எடுக்கத் தொடங்கினள். ஆலயம் சமைக்க வேண்டுவனயாவும் திரட்டப்பட்டன. ஒரு நன்னளில் இறைவன் திருப்பணியும் தொடங்கியது. சில ஆண்டுகளுக்குள் திருவை

யாற்றில் அழகியதோர் ஆலயம் அரசனுக்குச் சமைக்கப்பட்டு விளங்கியது.

திரைலோக்கிய மாதேவி அந்தணர்களை யழைத்து வந்து அக்கோயிலில் இறைவன் திருவுருவினைப் பிரதிஷ்டித்துப் பெருவிழாக் கொண்டாடினுள். அவ்விழாவிற்குப் பல தேசத்து ஜனங்களும் வந்திருந்தனர். அனைவரும் அவ்விழாவினைக் கண்டு களித்துப் பெருமகிழ் வெய்தினர். அக்கோயிலுக்குத் திரைலோக்கிய மாதேவி "லோகமாதேவீச்சரம்" என்று பெயரிட்டாள். அதனைத் தக்ஷிண பாஞ்சாலம் என்றும் உத்தர கைலாசம் என்றும் சிறப்பித்துக் கூறுவர். சேரமான் பெருமாள் நாயனுரும் சுந்தரமூர்த்தி நாயனுரும் முத்தி பெற்றது அத்தலத்திலேதான். அது தென்னிந்தியாவில் சிறந்த தலங்களுள் முதன்மை பெற்று இன்றும் நின்று நிலவுகின்றது.

இராஜ ராஜன் இருபெருங் கோயில்களுக்கும் பொன்னும் மணியும் முத்தும் நிலங்களும் கணக்கின்றிக் கொடுத்தான். அவன் அக்கோயில்களில் நித்த நைமித்திக பூசைகள் செவ்வையாக நடைபெற்று வருமாறு பல ஏற்பாடுகள் செய்தான். அவன் உறவினர்களும் அக்கோயில்களுக்கு வேண்டுவன அளித்துப் பெருவிழாக்கள் செய்துவந்தனர். சோழ நாட்டுக் குடிகள் இறைவன் திருவருள் பெற்றவர்களாய் ஒரு குறைவுமின்றி இனிது வாழ்ந்துவந்தனர். சைவம் சோணுட்டில் தலைசிறந்து விளங்கியது.

## XIII. முத்திப்பேறு

இராஜ ராஜன் சைவ மதத்தில் சிறந்த பற்றுடையவனாயினும் பிற மதத்தவர்களை அணுவளவேனும் வெறுத்தவன் அல்லன். பல பல மதமும் ஈற்றில் ஒருவழிப்படுதலை அவன் நன்குணர்ந்திருந்தான். அதனால் பிற மதத்தவர்களுக்கும் அவன் நன்மைகள் பலவற்றைப் புரிந்து வந்தான். பௌத்த விஹாரங்கள் பல அவனால் கட்டப்பட்டன. அவன் ஜைனப் பள்ளிகளுக்கு நிறைந்த பொருள் உதவியுள்ளான். விஷ்ணு ஆலயங்களுக்கு அவன் பொருள் அளித்துள்ளான். விஷ்ணு ஆலயங்கள் பலவற்றில் திருநந்தா விளக்கிடும் திருப்பணி அவனுதவியால் நடைபெற்று வந்தது.

கடாரம் என்பது பர்மா தேசம். அக்கடாரத்தைச் சூளாமணி வர்மன் என்ற ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவன் பௌத்த மதத்தைச் சார்ந்தவன். அவன் நாகைப்பட்டினத்தில் ஒரு பௌத்தாலயம் எடுக்க விழைந்து அத்திருப்பணியைச் செய்து வந்தான். ஆனால் அத்திருப்பணியைப் பூர்த்தி செய்து காண அவன் பாக்கியமற்றவனாய்த் திருப்பணி நடந்து வருகையில் இறைவன் திருவடி நிழலை யடைந்தான். பின், அவன் மகன் மாறவிஜயோத்துங்கன் கடாரத்திற்கு அரசனானான்.

மாற விஜயோத்துங்கன் அரியணை ஏறியதும் திருப்பணி யனைகுறையாக விருத்தலை அவன் யுணர்ந்து அதனைத் தான் முற்றுப்பெறும்படி செய்தான். அக்காலை அவன் இராஜ ராஜனை யணுகி அவன் பெயரை அப்பெரும் பௌத்தாலயத்திற்கு இட அனுமதி கேட்டான். இராஜ ராஜன் சிறிதும் மனங்கோணுதலின்றித் தன் பெயரை அவ்வாலயத்திற்கு இடுமாறு சம்மதித்தது மன்றி, அவ்வாலயத்திற்கு ஆனை மங்கலம் என்னும் வளப்பம் மிகுந்த கிராமத்தையும் அதன் செலவிற்காக அளித்தான். அன்று முதல் அவ்வாலயம் இராஜ ராஜப் பெரும்பள்ளி என்னும் பெயர் பெற்று விளங்கியது.

சிற்றூர்க் காட்டாம்பள்ளியிலும், திருநறுங் குன்றை நாற்பத் தொண்ணுயிரப் பெரும் பள்ளியிலும் இராஜ ராஜனது சாஸனங்கள் காணப்படுகின்றன. அதனுல் அவ்விடங்களுக்கும் இராஜ ராஜன் சென்று பெரும் பொருள் அளித்துள்ளான் என்பது புலனுகின்றது. மற்றும் தஞ்சையிற் கட்டிய இராஜ ராஜேச்சரத்தில் சிற்சில விடங்களில் பௌத்தப் படிமங்கள் காணப்படுகின்றன. மேற்கூறியவற்றுல் இராஜ ராஜன் பிற மத துவேஷ மற்றவன் என்பது செவ்வையாகப் புலப்படுகின்ற தல்லவா? அவனுடைய ஒப்பற்ற உயர் குணங்களை அவன் செய்த செயல்களே நன்கு விளக்குகின்றன.

இராஜ ராஜனிடம் விளங்கிய ஒப்பற்ற அருஞ் செயல்களாலும் குணங்களாலும் சோணுட்டுக் குடி

களே யன்றிப் பிற நாட்டுக் குடிகளும் புகழ்ந்துகொண் டாடினர். தஞ்சையில் இராஜ ராஜேச்சரத்தில் ஆண்டு கள்தோறும் 'இராஜ ராஜேச்சர நாடகம்' என்று ஒரு நாடகம் எழுதி அதனை நடித்து வந்தனர் என் பதே குடிகள் மன்னனிடத்து வைத்திருந்த உண்மை யன்பினை விளக்குவ தன்றோ? மன்னனும் பல்லாற்று னும் குடிகளுக்கு நன்மைகளையே புரிந்துவந்தனன். அவன் செங்கோல் மேன்மேலும் உயர்வுபெற்று ஓங் கியது. மன்னன் இறைபணியில் ஒரு சிறிதும் குன் றாது உள்ளன்போடு உயரிய காலங்களில் ஏற்றவாறு தொண்டு புரிந்துவந்தான். அவன் ஆட்சியில் நாடு செழித்தது. குடிகள் இன்பற்று வாழ்ந்துவந்தனர். சைவம் தழைத்தது. அறம் ஓங்கிற்று. மறம் அழிந் தது. உண்மை உயர்வடைந்தது. உலகம் அவனைப் போற்றியது.

இறைபணியிற் குறைவுறா மன்னன் தான் முதுமை யடைந் திருத்தலை யுணர்ந்து, தன் மகன் இராஜேந் திரனுக்குப் பட்டங் கட்டி வைத்துவிட்டு இறை வன் அருட் பூங்கழலையே சிந்தை செய்துகொண்டு கி. பி. 1012-இல் அவன் திருவடி நிழலை எய்தினன். அவன் மனைவிமார்களும் அவன் பிரிவாற்றாமையால் வருந்திச் சில வருடங்களுக்குள் விண்ணுல கெய்தி னர்.

குந்தவை தன் தாய் தந்தையர்களது உருவங்களைக் கல்லிற் செய்வித்து தஞ்சை இராஜ ராஜப் பெரும்

பள்ளியில் அமைத்து அவன் பூசை முதலியவற்றிற்கும் வேண்டுவன அளித்தாள்.

இராஜ ராஜன் மண்ணுலகு நீத்து விண்ணுலகு எய்தியதைக் கேட்டு வருந்தாதார் இல்லை. இராஜேந்திரன் தன் தந்தைக்குச் செய்யவேண்டிய சடங்குகளைச் செவ்வனே செய்தான். பின், இராஜேந்திரன் அரியணைமீது அமர்ந்து அனைவரும் போற்றச் சோழ நாட்டைப் புகழோடு அரசாண்டுவந்தான்.

பொங்கும் மங்களம் எங்குந் தங்குக

முற்றிற்று

Printed at the Guardian Press, Ltd., Madras.